
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7 | இதழ்: 11 | ஏப்ரல் - 2026 | விலை - ரூ.20/-

VOL:7 | ISSUE: 11 | APRIL - 2026 | Rs. 20/-



சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.



குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	– ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	– ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	– ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	– ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	– ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-7 மலர்-11 ஏப்ரல்-2026

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமார்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே...

இப்போது நீ பிரச்சனைகள், தடங்கல்கள் எனும் கடலில் கழுத்துவரை மூழ்கியிருக்கலாம். துக்கமும் வேதனையு மாகிய படுகுழியில் ஆழமாக அமிழ்ந்து போயிருக்கலாம். அதை பற்றி நினைத்து வருத்தப்படாதே. அமைதியாயிரு, பொறுமையை கடைபிடி. உனது துக்க நாட்கள் முடிந்து போயின. உனக்கு நல்லது நடக்கத்தான் போகிறது. அது விரைவில் நடந்தே தீரும்.

கர்ம வினைகள் எவ்வளவு பலமாக இருந்தாலும் அது கண நேரத்தில் நசிந்து விடும். என் அனுக்கிரகம் உனக்கு நிரந்தரமாக இருக்கும். நீ தேடிச்சென்ற காலம் போய் அனைத்தும் உன்னைத் தேடி வந்து உன் வாசல் கதவைத் தட்டும். இது உன் தந்தையின் ஆசீர்வாதம், மற்றும் நல்வாக்கு. எனது வார்த்தையை நம்பு.

என் மென்மையான கரங்களால் உன்னை வருடிக்கொண்டு உன் பக்கத் தில் தான் நான் உனக்காக இருக்கிறேன். நீ உனக்கு வேண்டியதை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு ஆவலுடன் என்னைப் பார்க்க வரும் நாளை நானும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன்.

உனக்கு ஒரு விஷயத்தைச் சொல் கிறேன் கேள்! நான் உன்னுடன் எப்போதும் இருக்கிறேன். நீ கவலை யில்லாமல் இரு. எந்த ஆபத்திலிருந்தும் நீ முற்றிலும் காப்பாற்றப்படுவாய் என்பதில் உனக்கு எந்தவித சந்தேகமும் வேண்டாம். ஒவ்வொரு வினாடியும் நான் உன்னுடன் இருக்கிறேன்.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா



ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் பேரருளால் தொண்ணூற்று மூன்றாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு, இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில், மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம்மாத இதழை பிரபல திரைப்பட இயக்குனர் திரு. அருண் வைத்தியநாதன் அவர்கள் வெளியிட, திரு. ஷ்யாம்– ராதா தம்பதியினர் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள். விழாவில்,

"பாராயணப்பகலவன்" திரு. சுந்தர்சாய், திருமதி. ஜெயந்தி, திருமதி. மாதங்கி, திருமதி. தனம், திருமதி. சுகுணா, திரு அகஸ்டின், திரு. ராஜசேகர், ஆகியோர் தங்களது அனுபவங்களை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள்.



சாய் தினானாலயா ஆத்ம ஞான பீடத்தின் அன்னதானக் குழுவினர் வந்திருந்த பக்தர்களுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர்.புத்தக வெளியீட்டு விழா மதியம் 2 மணிக்கு இனிதே நிறைவடைந்தது.

நாம் குழந்தையாக இருந்தபோது அமைதியும் ஆனந்தமும் நமது இயல்பாக இருந்தது. எப்போதும் ஆனந்தமாகவே இருந்தோம், எப்போதாவது, யாராவது, நமது ஆனந்தத்தைக் கெடுப்பார்கள். ஆனால் இப்போதைய நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.



எப்போதும் வருத்தமாகவே இருக்கிறோம். எப்போதாவது யாராவது நம்மை ஆனந்தப்படுத்த வேண்டி இருக்கிறது.

ஒரு மனிதன் எப்போது அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்வதைத் தன்னுடைய இயல்பாகவே கொள்கின்றானோ, அப்போது அவனது வாழ்க்கை, ஆனந்தத்தைத் தேடுவதாக இருக்காது. ஆனந்தத்தின் வெளிப்பாடாகவே இருக்கும்.

இன்று மனிதன் தன் சுயநலத் திற்காக உலகை சிதைத்துக் கொண்டிருக்கிறான். ஒவ்வொரு தாவரமும், புழுவும், பூச்சியும், பறவையும், விலங்கும், மனிதனின் மகிழ்ச்சிக்காக சித்திரவதைக்கு ஆளாகின்றன. தன் மகிழ்ச்சிக்கு விலையாக இந்தப் பிரபஞ் சத்தையே தந்தும் கூட மனிதன் மகிழ்ச்சியை உணரவில்லை. அமைதியையும் உணரவில்லை.

நல்ல வேளையாக உலக மக்கள் தொகையில் 50% விகிதத்தினர்

சோம்பேறிகள். இல்லையென்றால் அவர்களும் சுயநலத்தோடு செயல்கள் புரிந்து இந்த உலகத்தை மேலும் சிதைத்திருப்பார்கள். இன்றைய உலகத்தைக் காப்பாற்றிக் கொண்டிருப்பது மனிதனின் செயல்களல்ல. மனிதனின் சோம்பேறித்தனம் தான்.

எனவே, இதற்கான பரிமாணத்தை நாம் உணரத் தொடங்கினால், வெளியே உங்களைச் சுற்றி நடைபெறுகிற சம்பவங்களைச் சார்ந்திராமல் அமைதியானவராகவும் ஆனந்த மானவராகவும் வாழ வேண்டும். வெளியுலகம் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்க வாய்ப்பில்லை. எவ்வளவுதான் அறிவியலும் தொழில்நுட்பமும் முன்னேறினாலும் கூட வெளிச்சூழல் முழுக்க முழுக்க உங்களுக்கு விருப்பமான விதங்களில் அமையப் போவதில்லை. நீங்கள் வளர்க்கும் நாய் கூட உங்கள் கட்டளைப்படி முழுமையாக நடப்பதில்லை. குறைந்தது உங்கள் உள்தன்மையாவது நீங்கள் விரும்புகிற விதமாய் அமைய வேண்டுமில்லையா? எனவே உங்களையாவது நீங்கள் உங்கள்





கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

அமைதியில்லாத நிலை உங்களுக்கு இருபத்து நான்கு மணிநேரமும் இருப்பதில்லைதான். ஆனால்ஒரு நாளில் ஏற்படுகிற ஐந்து நிமிடப் பதட்டம் கூட உங்கள் வாழ்வைப் பாழ்படுத்தி விடக்கூடும். எனவே வெளியில் என்ன நடக்கிறது என்பதை உங்களால் முடிவு செய்ய முடியாவிட்டாலும், உங்களுக்குள் என்ன நடக்க வேண்டும் என்பதையாவது நீங்களே முடிவு செய்தாக வேண்டும் என்பதை உணர்வோமாக!

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.


வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

புத்தக வளர்ச்சி நன்கொடை

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 90 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந் தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திரு. கதிரேசன், சாதனா நிகேதன், கொட்டையூர், குடந்தை. ரூ.1000.
திரு. கார்த்திக் லோகேஸ்வரி, வாடிப்பட்டி. ரூ.500.
திரு. கிருஷ்ணமூர்த்தி, கோவை. ரூ.200
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர். ரூ.200.
திருமதி. காயத்திரி, மானா மதுரை. ரூ.300.
திருமதி. சுசீலாகோபாலன். சென்னை. ரூ.200.
திரு. மகேஸ்வரன். சென்னை ரூ.200.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.



சாய்சரிதம்-25

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதை பதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

கதை வடிவில்

இப்பிரபஞ்சத்தில் நாம் காணும் அனைத்தும் நிலை யற்றது. அதையே மாயை என்கிறோம். அதையே நாம் கடவுள் என்கின்றோம். ஆயினும் அதைத்தாண்டிய பரப்பிரம்மம் என்கின்ற மெய்ப் பொருள் நமக்கு புரிவதில்லை. இருட்டில் கொடியில் கிடக்கும் கயிற்றையோ, மாலையையோ நாம் பாம்பாக நினைத்துக்கொள்வதைப் போன்று, நாம் காணும் பொருட்களின் புறத் தோற்றத்தை மட்டுமே காண்கிறோம்.

அதன் அகத்தோற்றத்தில் மறைந்திருக்கும் மெய்ப்பொருள்

என்னவாக இருக்கும் என்பதை நாம் அறிய முயற்சிப்பதில்லை. மறைந்திருக்கும் மெய்ப்பொருளை அறிந்து கொள்ள நமது அறிவுக் கண்களை சற்குரு மட்டுமே திறந்து விடுகின்றார். பொருட்களை அதன் தன்மையிலேயே காணாமல், அதன் உண்மைத்தன்மையை காணுமாறு நம்மை ஊக்குவிக்கின்றார். எனவே நாம் சற்குருவை வணங்கி, நமக்கு மெய்ப்பொருளை உணர்த்த வேண்டி தியானிப்போம்.

எமது ஆனந்தக்கண்ணீர் சற்குருவின் புனித பாதங்களை கழுவும் வென்னீராக மாறட்டும். எமது அன்பு என்னும் சந்தனத்தை அவரது மேனியில் பூசிவிட்டு,



– வே.ஸ்ரீராம்

உண்மை, நம்பிக்கை என்ற உடையை அவரது மேனிக்கு உடுத்தி, எமது எட்டுவிதமான சாத்வீக உணர்ச்சிகள் என்னும் எட்டு தாமரை மலர்களையும், ஒருமுகப்பட்ட எனது மனமாகிய கனியையும் அவருக்கு சமர்ப்பிக்கின் றோம். பக்தி என்ற நறுமணப்பொடியை அவருக்கு பூசிவிட்டு, பற்று என்ற வேட்டியைக் கட்டிவிட்டு எமது தலையை அவரது பாதத்தில் வைத்து இவ்வாறு வேண்டுகிறோம்.

உலகப்பொருட்களின் மீதிருக்கும் எங்களது புத்தியை பற்றின்மை என்ற மெய்ஞானத்தை நோக்கி திருப்பி விட்டு ஆத்ம உணர்வை அடைய உதவி செய்யுங்கள். ஆன்மாவையும், உடலையும் உங்களிடம் ஒப்புவிக்கிறோம். உங்களது விருப்பத்தின்படி எங்களது உடலையும், மனதையும் கட்டுப்படுத்துங்கள். உங்களது பாதகமலத்தில் எங்களது மனம் ஆறுதல் அடையட்டும். இவ்வாறு ஹேமாட்பந்த் ஆகிய நான் பாபாவிடம் பிரார்த்திக்கின்றேன்.

இப்போது பக்தர்களின் கதைகளுக்கு வருகின்றேன். திரு. பந்த் என்பவருக்கு அவரது நண்பர்களின் மூலம் சீரடிக்கு செல்லும் வாய்ப்பு வந்தது. ஆயினும் அப்போதைக்குச் சீரடிக்குச் செல்லும் எண்ணம் இல்லாததனால் அந்த வாய்ப்பை திரு. பந்த் அவர்கள் தவிர்த்துவிட்டார். ஆனால் நாமொன்று நினைக்க, தெய்வம் வேறொன்றையல்லவா நினைக்கும்.

சிலநாட்கள் கழித்து அவர் தனது சற்குருவிடம் சென்றபோது தன்னையும் அறியாமல் தான் சீரடிக்குச்சென்று சாயிபாபாவை தரிசிக்கலாமா என்று அனுமதி கேட்டார். சற்குருவும் உடனடியாக சென்றுவா என்று அனுமதி கொடுத்தார். உடனே செலவுக்கு பணம் தயார் செய்துகொண்டு தனது நண்பர்களின் குழுவோடு சீரடி பயணத்தில் தன்னையும் இணைத்துக்கொண்டார்.

மறுநாள் அனைவரும் சீரடியை அடைந்து காலை 11 மணிக்கு பாபாவை தரிசிப்பதற்காக மசூதிக்குச் சென்றனர். அங்கு நூற்றுக்கணக்கான பக்தர்கள் குழுமியிருப்பதை கண்டு ஆச்சர்யத்துடன் அங்கு நிகழ்ந்து கொண்டிருந்த இசை நிகழ்சிகளை ரசித்துக் கொண்டிருந்தனர். அப்போது திரு. பந்த் அவர்கள் திடீரென்று வலிப்பு வந்து மயங்கி பாபாவின் முன்பே கீழே விழுந்துவிட்டார். இதைக்கண்ட அவரது நண்பர்கள் பெரிதும் பீதியடைந்தனர்.

அவரை மீண்டும் சுய நினைவிற்கு கொண்டுவர அவர்கள் கடும் முயற்சி செய்தனர். பாபாவின் அருளாலும், அவரது தலைமீது தெளிக்கப்பட்ட நீராலும் அவர் மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்தார். உடனே அவரை நோக்கி பாபா, "வருவது வரட்டும் விட்டுவிடாதே, உனது குருவையே உறுதியாகப் பற்றிக்கொண்டு எப்போதும் நிதானத்துடன் அவருடனே ஒன்றியிரு" என்று கூறினார்.

அவர் இன்னொரு குருவினுடைய சீடர் என்பதை அறிந்து கொண்ட சர்வாந்தர்யாமியான பாபா அவர் மீதுள்ள பக்தி எப்போதும் எந்நிலையிலும், எல்லாக் காலங்களின் மீதும் உறுதியாக இருக்க வேண்டும் என்று கூறி திரு. பந்த அவர்களை ஆசீர்வதித்தார். இம்மொழிகளை உணர்ந்து கொண்ட பந்த் அவர்கள் தமது சற்குருவை உணர்ந்து கொண்டார். பாபாவின் இந்த அன்பை திரு. பந்த் தனது இறுதிக்காலம்வரை மறக்கவே இல்லை.

பம்பாயில் ஹரிசந்திர பிதலே என்ற மனிதர் ஒருவர் இருந்தார். அவருடைய மகனுக்கு கால்கை வலிப்பு நோய் இருந்தது. எல்லாவிதமான மருத்துவ முறைகளையும் செய்து பார்த்தும் பலன் ஏதும் இல்லை. எனவே இறுதி முயற்சியாக ஞானிகளிடம் சரணடைவதே ஒரே வழி என்று முடிவெடுத்தார்.

ஏற்கனவே பம்பாயில் தாஸ்கணு மகராஜ் அவர்கள் தனது அற்புதமான கீர்த்தனை மூலமாக பாபாவின் புகழை பரப்பியிருந்தார். 1910 ஆம் ஆண்டு அக்கீர்த்தனைகளை கேட்ட பிதலே அதன் மூலம் பாபா தமது பார்வையின் மூலமும், தொடுதலின் மூலமுமே பல தீர்க்க முடியாத நோய்களை குணப்படுத்தியதாக அறிந்து கொண்டார். எனவே சீரடி சென்று பாபாவைக் காண வேண்டும் என்று முடிவெடுத்தார்.

ஒரு நல்ல நாளில் பாபாவிற்கு சமர்ப்பிக்க வெகுமதிகளையும், பழக்கூடைகளையும் தயார செய்து கொண்டு தனது குடும்பத்துடன்



பாபாவை தரிசிக்க சீரடிக்கு வந்தார். நேரே மசூதிக்குச் சென்று பாபாவின் முன் தனது நோயாளி மகனை அவரது பாதங்களில் கிடத்தி குடும்பத்துடன் பாபாவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்.

பாபா குழந்தையை ஏறிட்டு பார்த்த மாத்திரத்தில் அவன் கண்களைச் சுழற்றிக் கொண்டு உணர்வற்று பொத்தென்று கீழே விழுந்து கால்கைகளை இழுத்துக் கொண்டான். உடனே அவனது வாய் நுரையைத் தள்ளி உடம்பு முழுவதும் வியர்த்துக் கொட்டியது. அவனது நிலையைப் பார்த்தால் அவன் உயிரை விட்டுவிடுவான் போல் தோன்றியது.

இதைக்கண்ட தந்தை பிதலே பயந்து நடுங்கி உணர்ச்சிவயப் பட்டார். அவனது தாயோ ஒருபடி மேலே போய் எமனுக்கு பயந்து கோவிலுக்கு வந்தால் கடவுளே என் மகனை கொன்றால் நான் என்ன செய்வேன் என்று அலறத்தொடங்கினாள்.

உடனே பாபா அவளை நோக்கி, ஏய் பெண்ணே இம்மாதிரி கத்தித் தொலையாதே! கொஞ்சம் அமைதியாக இரு! இவனை உங்கள் இருப்பிடத்திற்கு கூட்டிச்செல். அரை மணி நேரத்தில் சரியாகிவிடுவான் என்று கூறினார். பாபா கூறியபடி பையன் அவர்கள் தங்கியிருந்த வாடாவிற்கு எடுத்துச்செல்லப்பட்டான். பாபா கூறிய வாக்கு உண்மையாயிற்று.

சரியாக அரை மணி நேரத்தில் பையன் குணமடைந்து எழுந்து அமர்ந்தான்.

பிதலேயின் குடும்பத்தினர் மிகவும் ஆச்சர்யம் அடைந்தனர். அவர்களது பயம் நீங்கியது. இனி பாபாவின் அருளால் பையன் பூரணமாக குணமடைந்து விடுவான் என்ற நம்பிக்கை பிறந்தது.

சிறிது நேரம் கழித்து பிதலே தன் மனைவியுடன் வந்து பாபாவின் அருகே அமர்ந்து அவருக்கு பழங்களையும், இனிப்புகளையும் சமர்ப்பித்து அவரது பாதங்களை பிடித்துவிட்டுக்கொண்டு தனது மனதிற்குள், நன்றி கூறினார்.

பாபா புன்சிரிப்புடன், நம்பிக்கையும், பொறுமை உடையோரையும் நிச்சயம் ஹரி காப்பாற்றுவார். உனது சந்தேகங்கள் அனைத்தும் தீர்ந்ததல்லவா? எனக்கேட்டார் பிதலே வசதியானவர். அவர் தனது குடும்பத்துடன் சில மாதங்கள் சீரடியிலேயே தங்கியிருந்து தினந்தோறும் பாபாவின் தரிசனத்தைப் பெற்றார். அவர் பாபாவின் பக்தர்களுக்கெல்லாம் பெரும் செலவுசெய்து அன்னதானம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்குப்பின் பிதலேயின் மனைவி பாபாவின் மேல் மிகுந்த நம்பிக்கையும் மரியாதையும் காட்டினாள். அவள் பாபாவிற்கு நேராக வராமல் தூரத்தில் தூணின் மறைவில் அமர்ந்து கொண்டு பாபாவையே பார்த்துக் கொண்டிருப்பாள். பாபாவும் அவளின்மேல் அன்புகாட்டினார். தம்மிடம் முழுமையாக சரணடைவோர்களின் வாழ்க்கையை ஞானிகளும், கடவுள்களும் ஏற்றுக் கொள்கின்றார்கள் என்பது உண்மையல்லவா?

பாபாவின் சந்நிதானத்தில் பல இன்பமான நாட்களை கழித்த பின்பு அக்குடும்பத்தினர் ஊருக்குச் செல்ல அனுமதி கேட்டு பாபாவிடம் வந்தனர். பாபா அவர்களுக்கு மகிழ்ச்சியோடு கை நிறைய உதியை அள்ளித்தந்து ஆசீர்வதித்தார். பின்பு பிதலேயை அருகே அழைத்து, " பாபு நான் உனக்கு முன்பே இரண்டு ரூபாய் கொடுத்திருந்தேன். இப்போது மூன்று ரூபாய் தருகிறேன். இதை உனது பூஜை அறையில் வைத்துக் கொள். நீ மிகுந்த நன்மையடைவாய்" என்று கூறினார்.

அவைகளை பிரசாதமாக பெற்றுக் கொண்ட பிதலேயின் குடும்பத்தினர். அவரிடம் ஆசி வாங்கிக்கொண்டு புறப்பட்டனர். பிதலே தமது மனதிற்குள்ளாக, நான் சீரடி வருவது இதுவே முதல் தடவை. பிறகு எப்படி நீங்கள் எனக்கு முன்பே இரண்டு ரூபாய் தந்திருக்கமுடியும் என்று மனதிற்குள் வினவினார். ஆனால் பாபா அதற்கு ஏதும் பதில் அளிக்காமல் மௌனமாக இருந்துவிட்டார். எனவே பிதலே குடும்பத்துடன் பம்பாய்க்கு திரும்பினார்.

பம்பாய்க்கு திரும்பியவுடன் முதல் வேலையாக தனது வயதான தாயிடம் சென்று சீரடியில் நடந்தவற்றை எல்லாம் கூறினார். மேலும் பாபா தனக்கு முன்பே இரண்டு ரூபாய் கொடுத்திருப்பதாக கூறியதையும் வியந்துபோய் கூறினார். உடனே அவரின் தாய், எனக்கு ஒரு சம்பவம் நினைவிற்கு வருகின்றது. நீ இப்போது உனது மகனை அழைத்துக்கொண்டு சீரடிக்கு பாபாவைப் பார்க்கச் சென்றதைப் போல, உன்னை உனது தந்தை அக்கல்கோட்டுக்கு, அக்கல்கோட் மகராஜை சந்திக்க கூட்டிச் சென்றார்.

அவர் உனது தந்தையின்

நேர்மையான வழிபாடிற்காக அவரை மெச்சி பூஜை அறையில் வைத்து வழிபடுவதற்காக 2 ரூபாய் அளித்திருந்திருக்கிறார். உனது தந்தை அந்த நாணயங்களை, தான் இறக்கும்வரை முறைப்படி வழிபட்டு வந்தார். ஆனால் அவருக்குப்பின் வழிபாடு இல்லாததால் அந்த ரூபாய்கள் காணாமல் போய்விட்டன. நீ அதிர்ஷ்டசாலி அக்கல்கோட் மகராஜ் சாயிபாபா ரூபத்தில் உனது கடமை, வழிபாடு ஆகியவற்றை நினைவுபடுத்தியிருக்கின்றார்.

இனிமேலாவது ஞானிகளின் வாக்கை ஒருபோதும் மறவாதே! கெட்ட எண்ணங்களையும், செய்கைகளையும் உதறிவிட்டு, முன்னோர்களையும், ஞானிகளையும் வழிபட்டு உனது பக்தியை வளர்த்துக்கொள் என்றாள். தாயாரின் இம்மொழிகளைக்கேட்டு பிதலே மிகவும் ஆச்சர்யப்பட்டார். பாபாவின் எங்கும் நிறைந்த தன்மையினை உணர்ந்து கொண்டு பாபாவை வணங்க வேண்டிய அவசியத்தையும் அறிந்து கொண்டு பாபாவின்மேல் மிகுந்த மரியாதையும், பக்தியும் செலுத்தினார்.

பூனாவைச்சேர்ந்த கோபால் நாராயணன் ஆம்ப்டேகர் என்ற பாபாவின் பக்தர் பல ஆண்டுகள் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து ஓய்வு பெற்றார். பின்பு வேறு வேலை பெறுவதற்காக முயற்சித்தார். ஆனால் வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. எனவே பல துன்பங்களால் அவர் துவண்டு போனார். இந்நிலையில் தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் சீரடிக்கும் சென்று தனது கவலைகளை பாபாவிடம் சமர்ப்பித்தும் வந்தார். இருந்தும் ஏதும் மாறவில்லை. 1916 வது வருடம் அவரது நிலைமை மிகவும் மோசமானதால் அவர் சீரடிக்குச் சென்று அங்கேயே தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் தன் மனைவியுடன் சீரடிக்கு வந்து இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார்.

ஒருநாள் தீட்சித் வாடவின் அருகில் உள்ள கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்ளலாம் என்று எண்ணி கிணற்றில் அருகில் நின்றிருந்த மாட்டுவண்டியில் அமர்ந்திருந்தார். அந்த சமயத்தில் அவரருகே சீரடியில் உணவகம் நடத்திவந்த சாயியின் அடியவரான சகுண் மேரு நாயக் என்பவர் ஆம்ப்டேகரின் அருகே வந்து தனது கைகளில் இருந்த ஒரு புத்தகத்தை காட்டி, அக்கல்கோட் மகராஜின் சரிதத்தை நீங்கள் படித்திருக்கின்றீர்களா என்று கேட்டார்.

உடனே ஆம்ப்டேகரும் அந்த புத்தகத்தை வாங்கி இல்லை என்றவாறே எதார்த்தமாக புத்தகத்தை திறந்து வந்த பக்கத்தை படிக்க ஆரம்பித்தார். அதில் அக்கல்கோட் மகராஜ் அவர்களின் அடியவர் ஒருவர் தீராத வியாதியால் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அந்த வேதனை தாங்க முடியாமல் போகவே மனம் உடைந்து தற்கொலை செய்து கொள்ளலாம் என்று அருகில் இருந்த கிணற்றில் குதித்துவிட்டார்.

உடனே அக்கல்கோட் மகராஜ் அங்குவந்து அவரது கையாலேயே அவனை காப்பாற்றி, "நல்லதோ, கெட்டதோ உன் முந்தைய பிறவிகளின் கர்மபலனை நீ அனுபவித்து தான் ஆகவேண்டும். அந்த அனுபவத்தை நீ பூரணமாக அனுபவிக்காவிடாமல் உன் ஆயுளை முடித்துக் கொள்வதற்கு தற்கொலை உனக்கு உதவி செய்யாது. மீண்டும் ஓர் பிறவி எடுத்து அந்த துன்பத்தையே மீண்டும் அனுபவிப்பாய். எனவே உன்னை நீயே மாய்த்துக் கொள்வதற்குப் பதில் இன்னும் கொஞ்சம் முயற்சி எடுத்து முந்தைய கர்மபலனை முழுமையாக தீர்த்துக் கொள்ள முடியாதா?

இந்த பொருத்தமான கதையை படித்துவிட்டு ஆம்ப்டேகர் மிகவும் ஆச்சர்யப்பட்டார். உள்ளம் உருகினார். பாபா அனுக்கிரத்தின் மூலம் அப்போது இக்கதையை அவர் படித்திருக்காவிட்டால் அவர் உயிருடன் இருந்திருக்க மாட்டார். பாபாவின் எங்கும் நிறைந்த தன்மையினை உணர்ந்து அவரது கருணையுள்ளத்தை அறிந்து கொண்டு அவர் பாபாவின் தீவிர பக்தராகிவிட்டார். அவரின் எதிர்காலம் சிறப்புறத் தொடங்கியது. பின்னர் அவர் சோதிடம் கற்று அதில் திறமை பெற்று தமது செல்வத்தை பெருக்கிக் கொண்டார். பிற்காலத்தில் அவர் செல்வசெழிப்பாகவும் வசதியாகவும் வாழ்ந்தார்.

ஸ்ரீ சாயியைப் பணிவோம்! சகல நன்மைகளையும் பெறுவோம்!

தொடரும்.

கடை வாடகைக்கு

பெரம்பூர் வியாசர்பாடி ஏரியாவில் கடை அலுவலகம் வைப்பதற்கு வசதியாக,
120 சதுர அடி கொண்ட கடை வாடகைக்கு,
3 பேஸ் கமர்சியல் EB
வாடகை ரூ.8000/-



விபரங்களுக்கு

மேல்பட்டி பொன்னையன் தெரு,
ஈஸ்வரி கல்யாண மண்டபம் அருகில், பெரம்பூர்.
போன்: 8939642502

எச் செயல்களுக்கும் நான் பொருப்பல்ல!

நீங்கள் இறைவனிடம் முற்றிலும் சரணடைந்திருந்தால், இறைவனிடம் "நான் இங்கு வரத் திட்டமிடவில்லை. நீ என்னை இங்கே அனுப்பினாய். அதற்கு நோக்கம் ஏதாவது இருக்கும் அதை நீயே அறிவாய். அது என்ன என்பது எனக்குத் தெரியாது. நான் உன்னிடம் கேட்பது இதுதான்.

நீ என் மூலம் செயல்படுகின்றாய் என்பதை நான் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்குமாறு அருள்வாயாக! எச் செயல்களுக்கு நான் பொருப்பல்ல! நான் இதை எப்பொழுதும் மறக்காமல் இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள்.

இதுவே நம் பிரார்த்தனை என்றாகி விட்டால் நம் வாழ்க் கையில் மேலான அமைதி நில வும். உங்களுக்கு அந்த நம்பிக்கை இருந்தால், உங்கள் எண்ணம், சொல், செயல் எல்லாம் ஆண்ட வனின் அருளால் மிகச்சிறப்பாக நடைபெறும்.

நீங்கள் இறைவனின் நல்ல கருவியாக விளங்கினால் கருத்துக்கள் தானாகத் தோன்றும். "இது சரி, இதைச்செய்க" என்று உங்களைத் தூண்டும். அப்போது உங்களது வேலை என்னவென் றால் அவைகளுக்கு தடை போடாமல் அவைகளை நடைபெற விடுவதே!





தொடர் - 34

திருவருள் தேடி

சுத்குரு வாழ்க, சத்குரு பொற்றாமரை திருவடி வாழ்க என வணங்கி, நமது பேரன்பிற்குரிய வாசகர்கள் மற்றும் ஸ்ரீராம் பாபாவிற்கும் நமது நன்றி கலந்த வணக்கத்துடன், திருவருள் தேடியில் நமக்கேற்பட்ட அனுபவங்களை தொடருவோம்.

சென்ற இதழில் திருமதி. மாதங்கி பாலாஜி அவர்களை சந்தித்தது பற்றி எழுத ஆரம்பித்தோம். அவர்கள் தொகுத்து எழுதிய "அக்கல்கோட் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்த மஹராஜ் லீலாம்ருதம்" புத்தகம் மாருதிபுரம் ஸ்வாமி சமர்த்த சேவா சமஸ்தான் கோவிலில், முதலாம் ஆண்டு வருஷாபிஷேகத்தன்று சமர்ப்பணம் செய்யப்பட்டது.

அதிலும் ஸ்வாமியின் லீலை என்னவென்றால், அக்கல்கோட் சென்று, அங்கேயே சமஸ்தானில் வெளியிட திட்டமிடப்பட்டும், நான் இப்போது மாருதிபுரத்திலும் இருக்கிறேன் என்பதை உணர்த்தி செயல்பாடுகள் அனைத்தும் சுவாமி சங்கல்பப்படி எங்களை மஞ்சரி சாய்ராம் கோவிலுக்கு ஈர்த்து அங்கேயே வர்ஷாபிஷேக நன்னாளில் ஸ்வாமியின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

ஸ்வாமி சமர்த்தரின் முன்னிலையில் ஒரு நாள் பாராயணம் செய்யப்பட்டு, மிகவும் ஆசீர்வாச்சர்யமாக ஸ்வாமி விஸ்வரூப தர்சனம் மஞ்

சுந்தர் சாய்
9789404451

சரியின் சகோதரிக்கு கிடைக்க, அடியேன் முன்பு 4 பைரவர்கள் வந்தமர்ந்து ஆசி அளித்து புல்லரிக்க வைத்ததும் இன்றும் எமது நினைவில் நினைவிலே நீங்காமல் இருக்கின்றது.

ஸ்வாமி சமர்த்த மஹராஜ் க்ருபையினாலும், மாதங்கி அவர்கள் சம்மதம் பெற்று, கோபுரம் டிவியில் "அக்கல்கோட் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்த மஹராஜ் லீலாம்ருதம்" பற்றி தொடர் நிகழ்ச்சியாக பேச ஒரு ஸ்ரீராம நவமி நன்னாளில் உத்தரவு கிடைத்தது. அன்று, புனித வியாழக்கிழமை. ஷீர்டி சாய் சத்சரித்ர சப்தாஹ பாராயணம், மஹா அவதார பாபா கோவிலில் (மயிலாப்பூர்) பூர்த்தி செய்து, ஷீர்டி பாபாவிற்கு அபிஷேக, ஆராதனை தர்சனம் முடித்து இல்லம் திரும்ப, இந்த சேவா வாய்ப்புக்கான உத்தரவு கிடைத்தது நம் பாக்கியமே.

ஸ்வாமி மஹாராஜ் பிரகடன தினமான மே 6 ஆம் தேதி, 2024 ஸ்ரீ ஸ்வாமியின் அவதார மகிமையுடன் தொடங்கிய இந்த தொடர் ஒளிபரப்பு 100 ஆவது நிகழ்ச்சியாக இன்றளவும் கோபுரம் டி.வியில் தொடர்கிறது.

இதையும் விட விறுவிறுப்பான மற்றுமொரு பாக்கியம் மாதங்கி பாலாஜியின் நட்பால் நமக்கு வாய்த்தது. 2025 வருடம் குரு பூர்ணிமா நன்னாளில் அக்கல்கோட் இளவரசர் அழைப்பின் பேரிலும், ஸ்வாமி சமர்த்த மஹராஜ் ஆசீர்வாதத்தாலும் அக்கல்கோட் சென்று, ஸ்ரீ ஸ்வாமி மஹராஜ் அன்றைய அரச குடும்பத்திற்கு, சூரிய ஒளியினின்று உருவாக்கி வடித்து அவர் தம் திருக்கரங்களால் பரிசளித்த – "சூர்ய மணியை" அருகாமையிலிருந்து தரிசனம் செய்யும் அறிய வாய்ப்பு அது.

பொதுவாகவே, குரு பூர்ணிமா தினத்தில் குரு மகான்களின் புண்ய க்ஷேத்ரங்களில் பக்தர்கள் கூட்டம் அலை மோதும். அக்கல்கோட்டில் அன்று மட்டுமே அரச வம்சத்தினரால் பொதுமக்கள் தரிசனத்திற்கு வைக்கப்படும் இந்த அற்புதமான



"சூர்ய மணி" யை தரிசனம் செய்ய அண்டை அயல் நாட்டிலிருந்தும் பக்தர்கள் திரண்டு வரும் வழக்கம் கால காலமாய் பிரசித்தி பெற்றதாகும். ஆனால் நாங்கள் விசேஷ பாதையில் சென்று அருகே தரிசனம் செய்ய அருள் கிடைத்தது. ஜெய் ஜெய் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தா! மஹராஜ் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தா.

இது போன்ற பல அனுபவங்கள் மாதங்கி பாலாஜி அவர்கள் அறிமுகம் மூலம் நமக்கு கிட்டியது அனைத்தும் குருவருளான திருவருளாலே என உணர்கிறோம்.

அவர் மூலம் நாம் அறிந்த இன்னு மொரு தத்த பந்து " யூ டியூப் " நாராயணன் என்று அறியப்பட்ட பூஜா விதிகள், அலங்காரம், அபிஷேகம் என விசேஷ பக்தி பாங்குள்ள அன்பர். அவரும் தனிப்பட்ட முறையில் யூ டியூப் மூலம் தத்த அவதாரங்கள் பற்றி உரையாற்றுபவர்.

அவருடன் சேர்ந்து 'ஸ்ரீ குரு தத்த சேவா'வில் பயணிக்க வாய்ப்பு கிடைத்தது. ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் விக்ரஹ பூஜை, பாதுகாவிற்கு ருத்ராபிஷேகம், சித்த மங்கள ஸ்தோத்திர பாராயணம் என பல இடங்களில் அவருடன் பயணம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. பெங்களூரு, மைசூர் மட்டுமின்றி ஸ்ரீலங்கா விற்கும் பாதுகா பூஜை செய்ய, கொழும்பு சாய் நாதன் சரணாலயம், அவிசாவிளை பாபா கோவில் கும்பாபிஷேகம் என்று புனித பயணம் செல்லும் வாய்ப்பு கிட்டியது.

மாருதிபுரம் ஸ்வாமி சமர்த்த மஹராஜ் சேவா சமஸ்தான் கோவி லுக்கு அவருடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அங்கே காட்சி யளிக்கும் பளிங்கு மூர்த்திகள் அவர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டதாகும். குரு தத்த பரம்பரை பற்றிய விசாலமான அறிவுள்ளவர் நண்பர் திரு.நாராயணன். அவர்கள்.

இந்த ஆன்மீகப் பயணத்தில் நமக்கு அறிமுகம் செய்யப்பட்ட அடுத்த நெருங்கிய நட்பாய் திருவாளர்கள் ராதாமணி மற்றும் ஸ்ரீனிவாசன் தம்பதியர். ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் விசேஷ தினத்தில் ஸ்ரீ ருத்ர பாராயணம் மற்றும் 2498 மாணவர்களின் அகண்ட சித்த மங்கள ஸ்தோத்ர பாராயணம் ஆவடி ஹிந்து கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.அந்த நிகழ்ச்சியில் அறிமுகமாணவர் திருமதி. ராதாமணி.

மிகவும் அன்புடன் பழகக் கூடியவர். முதல் நாள் அறிமுகத் திலேயே, அவரது இல்லத்திற்கு வருமாறு ஆத்மார்த்தமாய் அழைப்பு விடுத்தார். மாதங்கி பாலாஜியுடன் நானும் சென்ற பொழுதுதான் அவர்கள் அறிமுகத்திற்கான காரணம் விளங்கியது. ஒவ்வொரு கட்டமாக, ஒவ்வொரு அறிமுகம் என்பது எந்த பிரபஞ்ச சக்தியால் நிகழ்த்தப்படும் செயல் என்பது தெளிவாகும்பொழுது பெரும் வியப்பு உண்டாகிறது. ஆம் அவர்கள், பழைய சீவரம் என்றறி யப்படும், காஞ்சிபுரம் வாலாஜாபாத் அருகே உள்ள பழைய சிவபுரம் என்கிற இடத்தில் ஷீர்டி சாய் மஹராஜ் க்கு ஓர் ஆலயம் அமைத்து நிர்வாகம் செய்கிறார்கள் என அறிந்து ஆச்சர்யம் அடைந்தோம்.

ஷீர்டி என்கிற பெயரே தெரியாத கால கட்டத்தில், ஹைதராபாத்தில் அவர்கள் இல்லத் திற்குள் அதிரடி யாக நுழைந்து தக்ஷிணையை வலுக் கட்டாயமாய் கேட்டு பெற்று "பின்வரும் காலத்தில் நீ ஒரு வீடு கட்டுவாய், நாங்கள் மூவராய் அங்கே வந்து தங்குவோம்" என வாழ்த்தி மறைந்தாராம் பாபா. அந்நாளில் அவர்களுக்கு அது ஓர் விளங்கா புதிராய் இருந்தது.

அதற்கான நேரம் கனிந்து வாய்க்கப்பெற்ற சமயம், அனைத்தும் தானாகவே நிறைவேறியதுடன்,

கும்பாபிஷேகமும் பிரம்மரிஷி ஸ்ரீ. மோகன் ஜி என்னும் குரு மஹராஜ் தலைமையில் நிறைவேறியதுடன், பாபாவின் செய்தியாக " நான் ஏற்கனவே அங்கு வந்துவிட்டேன் " என்ற தெய்வ வாக்கு ஷீர்டியை சேர்ந்த சமஸ்தான் தலைமை பண்டிட் ஸ்ரீ சுலேகா மஹராஜ் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

வேளச்சேரியில் அவர்கள் வீட்டுக்கு சென்று உரையாடிய சமத்தில் தான் சாய் மஹராஜ் தேர்ந்தெடுத்த புனித பூர்வ ஜென்ம பந்துக்களாய் உணர்ந்ததும், சாய் குடும்பமாய் அன்பு பரிமாற்றம் ஆரம்பித்தது. நமக்கு தெரிந்த வகையில் அவர்கள் இல்லத்தில் மாதம் ஒரு முறை என சத்சங்கம் தொடங்கினோம். விஷ்ணு, லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம், ஏக தின சாய் சத் சரித பாராயணம் என.

அடுத்த கட்டமாக குரு யோகிஸ்ரீராம் பாபா அவர்களையும் அறிமுகம் செய்வித்து தியானம் + சத்சங்கம் என தழைத்தது எங்கள் நட்பு. ஆரம்பத்தில் அவர்கள் அபார்ட்மெண்ட்டிலிருந்தும், மற்ற இடங்களில் இருந்தும் நண்பர்கள் வந்தார்கள். யோகி ஸ்ரீராம் பாபாவின் மெடிடேஷனில் நல்ல ஈடுபாட்டுடன் ஆர்வம் காட்டினர். பின்னர் சாய் தியானாலயா குழுவில் இணைந்தும், திருமதி. ராதா உள்பட பலரும் பயனடைந்தனர்.

பின்பு, பழைய சீவரம் கோவிலில் குருவின் சத்சங்கம் தொடங்கி, பிரதி மாதம் ஒரு வியாழன் மாலை சத்சங்கம் இன்றளவும் ஸ்ரீராம் பாபாவின் அருளுரையுடன் தொடர்ந்து



நடக்கிறது. அங்குள்ள ஊர் மக்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, ஸ்ரீராம் பாபாவின் மூலம் பயனடைகின்றனர். இவைகளுடன், சாய் மஹராஜ் க்கு சிம்ஹாசன், செங்கோல், க்ரீடம் சமர்ப்பணம் செய்யும் விழாவும் விமர்சையாக நடைபெற்று, அதில் ஸ்ரீ. சுலேகா மஹராஜ் (ஷீர்டி சமஸ்தானில் ப்ரதான பூஜாரியாக பணியாற்றியவர்), அச்சுதானந்த சுவாமிகளுடன் அடியேனும், ஸ்ரீராம் பாபா மற்றும் ஆத்ம ஞானிகள் – அகஸ்டின், ராஜசேகர், மாதங்கி பாலாஜி ஆகியோரும் பங்குகொண்டு மகிழ்ந்தோம்.

பழைய சீவரத்திலிருந்து 7 பக்தர்கள் ஸ்ரீராம் பாபாவின் குழுவில் இணைந்து ஷீர்டி புனிதப் பயணத்தில் கலந்து கொண்டு சாய் தர்சன், தியானம் மற்றும் சத்சங்க அனுபவங்களை முழுமையாக அனுபவித்தனர். அதன் மூலம்

நிறைவான மன, வாழ்க்கை மாற்றங்களும் ஏற்படுவதை உணர்கின்றனர். நமது அன்பின் அடைக்கலமான சாய் மஹாராஜ் அசத்தும் லீலைகளில் ஒன்றாய் தானே தேடி வந்து, கோவில் கொண்டமர்ந்து, எளிய மக்களை ஈர்த்து ஆட்கொண்டு ஆசி வழங்கும் பாங்கே அற்புதமான ஆச்சர்யம்.

இன்னுமொரு மிகவும் அதிசயம் சாய் மஹாராஜ் நமக்கு கீதப்ரியா எனும் தீவிர பக்தயை அறிமுகம் செய்து, மஹா அவதார் பாபாஜி கோவிலுக்கு நம்மை ஈர்த்து சப்தாக சத்சரித பாராயணத்தில் இணைய வைத்தது. அதன் தொடர்ச்சியாக தத்த குடும்பம் எனும் ஒரு வாட்ஸாப் குழுவில் அறிமுகம் செய்து பல இடங்களில் பாராயண, சத்சங்க வாய்ப்புகள் அமைத்து கொடுத்தார்.

கீதப்ரியா நம்முடன் ஷீர்டி பயணம் செய்து, ஸ்ரீராம் பாபாவின் அறிமுகம் பெற்று அவர்கள் இல்லத்திற்குச் சென்று அவரிடம் ஆசி பெற்றார். கீதப்ரியாவின் உள் மனதில் சாய் சத்சரிதம் உணர்த்தும் உயர்ந்த கருத்துக்களை ஒரு பொது மேடையில் சத்சங்கமாக நடத்த தீவிர விருப்பம் இருந்தது. ஷீர்டியில் எங்கள் சாய் தர்சன் அவருடைய பிறந்தநாளில் அமைந்தது ஒரு மிகப்பெரிய ஊக்க சக்தியை அளித்து உடனே அவர் விருப்பத்தை நிறைவேற்ற களம் உருவாயிற்று.

எங்கள் நட்பு இணைந்த சக்தியுடன் ஆர்வமாய் பூர்வாங்க வேலைகளை தொடங்கினோம். முதல் முதலாய், நமது 'சாய் மஹாராஜ் குருவைத் தேடி' இதழ் வெளியீட்டு விழாவில் கீதப்ரியா உணர்ச்சி வசத்துடன் அறிவித்தும் விட்டார். ஆனால் அந்த நேரத்தில் அவருக்கு நெருக்கமாய் ஆதரவு தர ஆர்வம் காட்டியவர் பெரிய வியாபார சிக்கலில் மாட்டிக்கொண்டு, உதவி செய்ய இயலாத சூழ்நிலை.

கீதப்ரியா சற்றே தளர்வு அடைய, நாம் அதில் முக்கிய பங்களிக்க பாபாவின் சங்கல்பம் நிறைவேறியது. " எங்கே என்று எப்படி " என பல கேள்விகளுக்கு இடையில் திட்டமிட்டு, ஒரு வியாழனன்று ஒருவாறு சமாளித்து பாரதீய வித்யா பவன் மெயின் ஹால் புக் செய்து விட்டோம். சுமார் 500 பேர் வரை கொள்ளளவு. அன்றே முதல் பேச்சாளர் பாபாவினால் தேர்வு செய்யப்பட்டு, அவரும் ஆச்சர்யத்துடன் ஒப்புதல் அளித்து விட்டார். அவர் ஒரு பிரபலமான உச்சநீதிமன்ற வக்கீல் ஆனால் மேடைப்பேச்சு இதுவே முதல் முறை! தலைப்பு ' சாய் சத்சரித்திரம் வழி காட்டும் பாதையில் கர்ம மார்க்கம். அவரும் தீவிர சாய் பக்தை என்பது அன்று வரை யாமறியாத விஷயம்.

மற்ற பேச்சாளர்கள், தலைப்புக்கள் பற்றி தொடர்வோம் அடுத்த இதழில். அன்பு சாய் குடும்பத்தினர் அனைவர்க்கும் சுந்தர் சாய் யின் இதயம் கனிந்த இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்! வாழ்க வளமுடன், நாளும் நலமுடன், பரிபூரண மன அமைதியுடன். குரு வாழ்க, குருவே துணை என்றென்றும்.

தொடரும்



விஸ்வ அன்பு

விஸ்வ அன்பு என்பது எல்லாவற்றிலும் உங்களுடைய ஆன்மாவைக் காண்பதாகும் அது எல்லையற்ற, நிபந்தனையற்ற அன்பு.

உங்களுக்கு விசுவ அன்பு இருந்தால் நீங்கள் விரும்பாதது எதுவும் நடக்காது. நீங்கள் இந்த உலகத்தில் உள்ளது அனைத்தையும் ரசிப்பீர்கள். உங்களைக் கடிக்கும் கொசுவைக்கூட நேசிப்பீர்கள். அவைகளை வெறுக்க மாட்டீர்கள்.

கொசு உங்களைக் கடித்தால், "கொசுவே நீ கடிப்பதற்காக படைக்கப்பட்டிருக்கின்றாய், என்னைக் கடிப்பதன் மூலம் நீ உன் வேலையைச் செய்கின்றாய், நல்லது ஆனால் இங்கிருந்து போய்விடு நான் என் வேலையைச் செய்ய வேண்டும்" என்று சொல்லிப் பாருங்கள். நீங்கள் கொசுவை கொல்லமாட்டீர்கள். மாறாக கொசுவை நேசிப்பதை நிறுத்த மாட்டீர்கள்.

ஆனால் கொசுவை நேசிப்பது என்பது, உங்களை கடிக்க அனுமதிப்பதாகாது. நாம் கொசுவை நேசிப்பதால் அதை நாம் விரட்டக்கூடாது என்பதில்லை. நீங்கள் விஷத்தை நேசிக்கலாம். ஆனால் அதைக் குடிக்க வேண்டியதில்லை. ●

வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம்

12



சந்தேகமில்லாத நம்பிக்கையே ஞானத்தின் தெளிவு என்று ஸ்ரீரமண மகரிஷி அவர்கள் கீழ்வரும் பாடல்கள் மூலம்மிக அழகாக விளக்குகின்றார்.

அறியாமைக் குப்பகை யன்றதனாற் கன்ம
மறியாமை தன்னை யகற்றா-தறிவே
யழிக்குமறி யாமை யொளியந்த காரக்கும்
பொழிக்குமா றென்றே யுணர்.

எளிய கருத்து: எந்த செயல்களும் அறியாமைக்கு எதிரியுமல்ல, அவையெதுவும் அறியாமையைத் தீர்க்காது. எப்படி ஒளியானது இருளை நீக்குகிறதோ, அதுபோல ஞானமாகிய அறிவு மட்டுமே அறியாமையைப் போக்கும்.

நாம் ஆத்மஞானம் அடைவதற்கு தடையாயிருப்பது

அஞ்ஞானம் என்னும் அறியாமை இருளேயாகும். இந்த அறியாமை என்பது ஒரு கரியமேகக் கூட்டத்திற்கு சமம், அது உண்மைப் பொருளை பார்க்கவிடாது. எப்படி கரியமேகக் கூட்டமானது சூரிய, சந்திரனை காணவொட்டாமல் மறைக்கிறதோ அதுபோல.



நாராயணன்

உதாரணமாக, ஓர் அறைக்குள் விலையுயர்ந்த இரத்தினக்கற்கள் கண்ணாடிப் பேழைக்குள் வைக்கப்பட்டுள்ளது, அந்த கண்ணாடிப் பேழையானது திரையால் மூடப்பட்டுள்ளது. நாம் அந்த அறைக்குள் நுழைகின்றோம், கண்ணாடிப் பேழையோ, இரத்தினகற்களோ அந்த அறைக்குள் இருப்பது நமக்கு தெரியாது என்று வைத்துக்கொள்வோம். எவ்வளவு நேரம் நாம் அந்த அறைக்குள் இருந்தாலும், அப்படியே இருக்கவேண்டியது தான்,

மூடப்பட்டுள்ள திரையை விலக்காமல், அந்த பேழையையோ, அதனுள்ளிருக்கும் இரத்தின கற்களையோ நம்மால் அடையாளம் கண்டுகொள்ள இயலாது. அதுபோல அஞ்ஞானமாகிய திரை விலகாமல், ஆத்மஞான ஒளியானது ஒளிரமுடியாது. அறியாமை இருளை அறிவெனும் வாளினால் கிழித்தெறிய வேண்டும்.

ஞானத்தால் கைகூடவல்ல எதையும் வேறெந்த நற்கர்மங்களாலும் தரயிலாது, இதுதான் நம்பிக்கை! உறங்கிக்கி கொண்டிருக்கும் ஒருவன் கனவு காண்கிறான். தான் அடர்ந்த காட்டில் வழி தவறிவிடுவதாகவும், திக்குத் தெரியாமல் சுற்றிக் கொண்டிருப்பதாகவும் அப்பொழுது திடீரென புலி ஒன்று பாய்ந்து வந்து அவனை பிடித்து விடுவதாகவும் கனவு கண்டு, "ஐயோ புலி, புலி" என்று தூக்கத்தில் அலறுகின்றான். பதறியடித்துக்கொண்டு எழுகிறான், பதட்டத்தில் கட்டிலிலிருந்து கீழே விழுகின்றான். கீழே விழுந்தவுடன் அவனது தூக்கமானது கலைகிறது,

கலைந்த நேரத்தில் கனவிலிருந்தும் வெளிவருகிறான். வெளிவந்தவுடன் சுற்றும் முற்றும் பார்த்தவன் தான் கண்டது அனைத்தும் கனவு என்றறிந்து பெருமூச்சு விடுகிறான். எனவே, விழிப்புநிலை வந்தவுடன் அவன் கனவில் கண்ட காட்சிகள் அனைத்தும் பொய்யாகின்றன. அதுபோல் அஞ்ஞானம் அல்லது அறியாமை என்பது ஞானம் என்கின்ற அறிவொளி வருகின்றவரையில் பொய்யான மாயத்தோற்றம் இருந்து கொண்டே இருக்கும். அறியாமை இருக்கும்வரையில் ஆத்மபோதம் என்பது அடையமுடியாது, அஞ்ஞானத்தை ஞானத்தை கொண்டு மட்டுமே அகற்றமுடியும், வேறு எதனாலும் முடியாது.

அஞ்ஞானமாகிய திரையை விலக்க ஞானத்தால் மட்டுமே முடியும் என்பதனை ஸ்ரீஆதிசங்கர பகவத்பாதாள், தனது ஸ்லோகம் ஒன்றில் ஒரு அழகான உவமான கதையின்மூலமாக விளக்குகின்றார்.

அந்த ஸ்லோகத்தின் பொருளாவது, ஓர் அறையில் காரிருள் மண்டிக் கிடக்கிறது, அந்த அறையின் இருளைபோக்க என்ன செய்யவேண்டும்? அறையை கூட்டிப்பெருகினால் இருள் அகன்றுவிடுமா? அல்லது அறை முழுவதையும் கழுவிவிட்டு, துடைத்தால் இருள் அகன்றுவிடுமா? இல்லை, நாள் கணக்காக உபவாசம் இருந்து பூஜைகள் செய்தால் இருள் விலகிவிடுமா, ஏழை எளியவர்களுக்கு அன்னதானம், பொன், பொருள்களை தானம் செய்வதானால் இருள் விலகுமா?

இதுபோன்ற என்ன காரியங்களை மேற்கொண்டாலும் இருள் விலகாது, செய்வேண்டியவற்றை தவிர்த்து மற்றதை செய்வதானால் என்ன இலாபம்? அப்படியானால், இருள் விலகுவதற்கான உபகரணம் தான் யாது? காரிருள் மண்டியிருக்கும் அறைக்குள் ஒரு சிறிய விளக்கை எடுத்துத் சென்றால் உடனடியாக இருள் விலகிவிடும் அல்லவா! பலகால இருளானது சிறிய விளக்கால் அகற்றப்படுகிறது அதுபோல், ஞானமாகிய தீபத்தின் மூலமாகத்தான் அஞ்ஞானமாகிய இருளானது அகலும்.

செய்த, செய்கின்ற கர்மங்கள் எல்லாம் அஞ்ஞானத்திற்கு எதிரிடையானவை அல்ல. செயல் ஒன்று உண்டெனில், அதற்கான விளைவானது நிச்சயம் உண்டு, அந்த விளைவை அனுபவிக்க மேலும் செயல்களை புரிந்தாகவேண்டும். இது பிரபஞ்ச நியதி, செயலும் விளைவும் இவ்விதம் சுற்றி சுற்றி வரும். அப்படியானால், கர்மங்கள் அனைத்தும் வீணா? என்றால் இல்லை, அவை மாசுக்களைச் சிறிது சிறிதாக நீக்கி நம்மைத் தூய்மையாக்குமே ஒழிய ஞானத்தை அளிக்காது. அஞ்ஞான இருளானது ஞான விளக்கால் மட்டுமே அகற்றமுடியும், அப்படி அகற்றப்படும் நேரத்தில் ஆத்ம சைதன்யம் நம்மிடையே ஒளிர ஆரம்பிக்கும் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

இவ்வாறு ஹேமசூடன், ஆகமங்களும், சாஸ்திரங்களுமே சில இடங்களில் சூன்யவாதிகளுக்கு ஆதரவாக தானே இருக்கின்றது அப்படியிருக்க எப்படி நம்பிக்கை என்பது வரும்? எதில் நம்பிக்கை வைப்பது என்பதிலேயே குழப்பம் வருகிறது என்றான். இதைக்கேட்ட ஹேமலேகை, உலகத்தின் உண்மை நிலையினை உணர்ந்தவளாய் தன் கணவனாகிய ஹேமசூடனை நோக்கி பின்வருமாறு கூறினாள் .

“மனித மனமானது குரங்கின் சுபாவத்தை கொண்டது, அது எப்போதும் எதையாவது நினைத்துக்கொண்டே அங்கும், இங்கும் தாவிக்கொண்டே இருக்கும். சலனத்துடன் நிலையற்ற தன்மையினை கொண்டது இந்த மனிதமனம். மனிதர்கள் யாவரும் இந்த மனதின் சுபாவத்தினால்தான் பல்வேறு சங்கடங்களுக்கும், துயரங்களுக்கும் ஆளாகின்றார்கள். இதே மனமானது மனிதன் உறங்கும்போது எவ்வித சலனமும் கொள்வதில்லை, அங்கும்–இங்கும் தாவியும் குதிப்பதில்லை! அமைதியாக இருக்கின்றது. இப்படிப்பட்ட மனோபாவத்தோடு நான் இப்போது கூறும் விஷயங்களை



நிலையான மனதுடன் கவனமாக கேட்பீராக. ஏனென்றால், கவனமின்றி கேட்பதும், கேளாமல் இருப்பதும் ஒன்றுதான் அதனால் எந்த பயனுமில்லை" என்றாள் ஹேமலேகை.

முடிவில்லாத விவாதங்களை விட்டு ஒழித்து, உண்மையான சத்தியத்தின் மீது நம்பிக்கை கொள்பவனே பெரும்பலனை அடைகின்றான். ஆன்ம அனுப வத்தை அடைவதற்கு சத்தியத்தின் வாதத்தையும், அதில் நம்பிக்கை யையும் வளர்த்துக் கொண்டு சிந்தனை செய்ய வேண்டும். வயல்வெளியில் பயிர் செய்பவன், அறிவினால் ஆலோசனை செய்து அந்தந்த காலங்களில் உழவு செய்து சம்பாதிப்பதை போல, ஆத்மாவின் நலன்கருதி விசாரத்தினாலும், நம்பிக்கையினாலும் ஞானத்தை அடையவேண்டும்.

நம்பிக்கையாலும், சத்தியத் தின் பெயரிலும் அதிக முயற்சி யினை மேற்கொண்டு, முக்தியை அடைவதற்கான சாதனங் களை நாடவேண்டும். அப்படிப் பட்ட சாதனங்கள் அநேகமாக இருந் தாலும், எதனை அடைவதினால் ஒருவனுக்கு துயரம் என்பது உண்டாகாதோ, அதுவே அவனுக்கு மேன்மை தரக்கூடிய சாதனம் என்பதனை அறியவேண்டும்.

நாம் சற்றே கவனத்தோடு ஆராய்ந்து பார்த்தால் எல்லா இடங்களிலும், எதிலும் துக்கமானது நிறைந்திருப்பது நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால் பொன், பொருள், மனைவி, மக்கள், பதவி, புலனின்பம் மற்றும் கல்வி, கேள்வி, இவையாவும் கால, தேச நியதிகளுக்கு உட்பட்டு, ஒரு நிலையில்லாத தன்மையிலேயே காணப்படுவதால், இவைகளை துன்பத்திற்கான காரண விதைகள் எனக்கொள்ளவேண்டும். பரமமான மேன்மையானது, இவைகளிடத்தில் இல்லை என்பது சத்தியமான உண்மையாகும். இந்த பிரபஞ்ச சக்தியே மாயாமோகத்தை உண்டுபண்ணி இந்த மனிதனை மாயவலையில் தள்ளுகிறது.

ஒரு சாதாரண செப்படி வித்தைக்காரன் அற்ப மாயத்தால் நம்மை சில வினாடிகளில் மாய வலையில் சிக்கவைக்கின்றான், அவனிடமிருந்தே தப்பமுடியாத நம்மால் எப்படி பிரபஞ்ச சக்தி, ப்ரஹ்மத்தின் மாயமோகத்திலிருந்து எளிதாக விடுபடமுடியும்? செப்படி வித்தைக்காரனின் மாயவித்தைக்கு மாற்று வித்தை தெரிந்தவன் எப்படி அதில் சிக்கிக்கொள்ளாமல் தப்புகின்றானோ அதேபோன்று பிரபஞ்ச சக்தி, ப்ரஹ்மத்தின் மாயாமோகத்திலிருந்து விடுபட வேண்டுமானால் ஆத்ம ஞானம் கற்றுத்தெளியவேண்டும். தன்னு டைய உண்மை சொரூபத்தை

அறிந்தவன் உடனடியாக மாயாமோகத்திலிருந்து விடுபட்டு நித்திய சுகத்தையடைகின்றான். அந்த உண்மை சொரூபத்தை அறிய வைப்பதே ஆத்மஞானம் அல்லது மெய்ஞ்ஞானம் ஆகும்.

சில சூன்யவாத ஆகமங்கள், இந்த உலகமானது தானாகவே தோன்றியது என்றும், படைத்தவன் என்ற ஒருவன் இல்லையென்றும் கூறுகின்றது. இந்த பிரபஞ்ச மாயாகிய உலகம் உருவானதற்கான மூலப்பொருள் எங்கே? அது எங்கிருந்து கிடைத்தது? படைத்தவன் யார்? என்பதே அந்த குதர்க்க வாதிகளின் கேள்வியாக உள்ளது. அதனால், படைத்தவன் என்ற ஒருவன் இருப்பதற்கான வாய்ப்பில்லை, அது தானாகவே உருவாகியது என்று வீண் விவாதம் செய்கின்றனர். இப்படிப்பட்ட ஆகமநெறிகளையும், சாஸ்திரங்களையும் நிச்சயம் தள்ளிவைக்க வேண்டும்.

உயிரினங்களிலேயே மிகக்குறைவான அறிவுகொண்ட ஒரு சிறிய சிலந்திப்பூச்சியே தன்னுடைய வலையை பின்னுவதற்கு வெளியிலிருந்து மூலப்பொருள்களை பெறுவதில்லை. தன்னுடைய உமிழ்நீரிலேயே பெற்று, தான் வாழ்வதற்கான வலையை உருவாக்கிக் கொள்கிறது. அப்படியிருக்க, புல், பூண்டிலிருந்து ஆரம்பித்து இந்த உலகமனைத் தையும் உருவாக்கிய இறைசக்திக்கு மூலப்பொருள் என்ற ஒன்று வெளியிலி ருந்து தேவைப்படுமா? அப்படி பெற வேண்டிய அவசியம் தான் என்ன? ஆகவே, படைத்தவன் இல்லை என்று கூறுகின்ற அபத்தவாதிகளின் ஆகமங்களையும், கூற்றுகளையும் ஒதுக்கித்தள்ளிவிடவேண்டும்.

உலகத்தில் நடைபெறுகின்ற அசாத்தியமான, செயற்கரிய செயல்களை யெல்லாம் பார்க்கும்பொழுது இறைசக்தியின் ஆற்றலானது அபாரமானது என்பதனை நாம் உணரலாம். அந்த இறைசக்தியை ஞானத்தினால் அறிந்து சரணடைந்தவர்களை அது என்றும் கைவிடுவதில்லை, ஆனால் நமக்கு தேவையென்ற ஒன்றை துறக்கும்போது, அந்த இறைசக்தியே நம் தேவையை நிறைவேற்றிவைக்க தவறுவதில்லை.


பொருள் ஆசைகளாலும், பொருந்தாத மார்கங்களினாலும் அதனை அடையமுடியாது. இறைசக்தியானது அவரவரது கர்மநியதிகளின்படியே பலனைக் கொடுக்கின்றது. அதுவே ஆசைகளை அகற்றி, விருப்பு, வெறுப்பு இன்றி இதயவெளிக்குள், தியானத்தின்மூலம் உபாசிப்பவனின் தேவைகளை தனதாக்கிக் கொண்டு அவனின் எல்லா தேவைகளையும் அந்த இறைசக்தியே பூர்த்திசெய்கின்றது.

அந்த இறையை, பிரபஞ்ச சக்தியாகிய உண்மைப் பரம் பொருளை அறிய முயலுகின்றவர்களுக்குப் பூர்ணத்துவத்தை அளிக்கிறது. முயற்சியற்ற மூடர்களுக்கு மட்டுமே பிராரப்த கர்மாவும், கர்மநியதிகளும் எப்போதும் உண்டு. அப்பேற்பட்ட இறைசக்தியை அடைய முயற்சி செய்வதே இந்த மானிடப்பிறப்பின் நோக்கமாகும். இப்படியாக ஹேமலேகை, கூறிமுடித்தாள்.

தொடரும்

25.03.26 அன்று நிகழ்ந்த யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் பிறவித்திருநாள் நிகழ்வுகள்:



















15.03.26 அன்று நிகழ்ந்த “மௌனத்தின் மூலம் தவம்” நிகழ்வுகள்.











சாய் தியானாலயா
ஆத்மஞான பீடம் வழங்கும்

சாய் சங்கமம்

சாய் பஜன், குத்துவிளக்கு பூஜை, ஜோதி
தியானம்,பிரார்த்தனை, தியானம், ஹோமம்.

நாள்: 12.04.2026
ஞாயிறு காலை 9 மணிக்கு

தீராத நோய்கள் தீரவும், நீண்ட ஆயுள்,
ஆரோக்கியம் மற்றும், சனி, ராகு, கேது
தோசத்தில் இருந்து விடுபடவும் மாபெரும்

ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்

காணிக்கை: நபருக்கு ரூ.500/-

பங்கு பெற ஆர்வம் உள்ளவர்கள் முன் பதிவு
செய்து கொள்ளுங்கள்

இடம்:
இராமலிங்க வள்ளலார் சத்திய சபை
2/15, போலீஸ் மாணிக்கம் தெரு,
அயனாவரம், சென்னை-23.

விபரங்களுக்கு;
ஸ்ரீமதி. ஜெயந்தி ஸ்ரீராம்
6385129372.





தக்கலை பீர் முகம்மது அப்பா

தக்கலை பீர் முகம்மது அப்பா காலத்தால் மூத்த தமிழக சூபிக் கவிஞர் ஆவார். அவரது சீடர்களால் அப்பா என மரியாதையுடன் அழைக்கப்பட்டார். சிறந்த இறை நேசச் செல்வர். திருக்குர் ஆனின் உன்னத புகழ் அனைத்தையும் தம் மெய்ஞானக் கவிதைகளின் வாயிலாக மக்களுக்குத் தந்தவர். இவருடைய பாடல்கள் எளிதில் விளங்கிக் கொள்ளும் வண்ணம் எளிமையானவை.



பீர் என்பது இசுலாமிய சூபித்துவத்தில் ஆன்மிகக் குரு. முகமது என்பது நபிப் பெருமகனாரின் திருப்பெயர். சூபி கவிஞரான பீரப்பாவின் நினைவு நாள் விழா இஸ்லாமிய மாதம் ரஜப் 14ம் நாள் வருகின்றது. இந்த விழாவிற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது.

பீர் அப்பா திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டம் கணிகபுரத்தில் பிறந்தார். இவ ருடைய தந்தையார் சிறுமலுக்கர். தாயார் ஆமீனா. இவரின் காலத்தைப் பற்றிய சரியான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. 108 சித்தர்களின் வரிசையில் அப்பா அவர்களின் பெயரும் இடம் பெற்றுள்ளது. சமசுகிருத மருத்துவ நூல்கள் இவரை சித்த நாகார்ஜுனர் என்றே குறிப்பிடுகின்றன. தென்காசியில் சைவ சமயம் எழுச்சி பெற்று நின்றது. சைவ வெள்ளாளர்களும், பாளையப்பட்டு மறவர்களும், பட்டு நூல் நெசவாளர்களும் கலந்த வாழ்ந்த நகரில் இசுலாமியர்களும் வாழ்ந்து வந்தனர்.

அங்கு விசுவநாத சாமி கோவில் என்ற பிரமாண்ட கோவில் ஒன்று இருந்தது. அந்த கோயிலின் தர்மகர்த்தவான திரு. பெஸ்கட் ராம சாஸ்திரி, பீர்முகம்மதின் அப்பா சிறுமலுக்கருக்கு நெருங்கிய நண்பராக இருந்தார். எனவே, இருவீட்டுப் பிள்ளைகளும்

யோகி ஸ்ரீராம் பாபா

நெருங்கி பழகுவர். விளையாடுவர். இருப்பினும், இளமை காலத்தில் பீர்முகம்மது உலக நடப்புகள் எவற்றின் மீதும் ஆர்வம் காட்டாத மனம் படைத்தவராக இருந்தார். அதுவே அச்சூழலுக்கு அவருக்கு பொருத்தமாகவே இருந்தது.

அக்காலத்தில், அக்கோவில் குளத்தில் சைவர்கள் மட்டுமே குளிக்க அனுமதிப்பர். அச்சூழலில் பீர் முகம்மது என்ற இசுலாமியச்சிறுவன் குளித்ததால், பீர் முகம்மதுவின் அப்பாவுக்கும், கோவில் தர்மகர்த்தாவுக்கும் மனப்பிரச்சனையை ஏற்படுத்தி விட்டது. அன்றைய நாட்களில் தக்கலையானது நெசவாளர்களை அதிகம் கொண்ட இடமாக செயல் பட்டது.

எனவே, தக்கலைக்கு தமது வாழிடத்தை மாற்றி, அங்கு முஹைதீன் பிள்ளை என்பவருடைய வீட்டில் தங்கினர். அங்கு அவரது குடும்பத்தார், நெசவுத் தொழிலை மேற்கொண்டனர். அன்று தக்கலை, திருவாங்கூர் மன்னரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. திருவாங்கூரின் தலைநகராக அதன் அடுத்த ஊரான பத்மநாபபுரம் விளங்கியது. தன் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கேரள மாநிலத்தின் கொச்சிப் பகுதியைச் சார்ந்த மலைப் பகுதிகளில்தான் தவம் இருந்தார். அப்போதுதான் சூபிக் கருத்துப் பெட்டகமாம் பல நூல்களை எழுதியதாகத் தெரிகிறது.

திருமெய்ஞானச் சர நூல், ஞான மலை வளம், ஞான ரத்தினக் குறவஞ்சி, ஞான மணி மாலை, ஞானப் புகழ்ச்சி, ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானக்குறம், ஞான ஆனந்தகளிப்பு, ஞான நடனம், ஞான மூச்சுடர் பதிகங்கள், ஞான விகட சமர்த்து, ஞானத் திறவு கோல், ஞான தித்தி போன்ற அவரின் படைப்புக்களை வைத்து அவர் கிபி 17ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனவும் கருதுகின்றனர்.





தக்கலையில் வாழ்ந்த நாட்களில் தன் புகழ்பெற்ற நூலான ஞானப் புகழ்ச்சியை இயற்றினார்."தென்காசி நாடு சிறுமலுக்க ரென்னுமவர் தன்பால னிக்கதையைச் சாற்றினான்" (ஞானப் புகழ்ச்சி)"சிறுமலுக்கரீன்ற தவச் சிறப்புடைய பீர்முகம்மது" (ஞானக் குறம்)பீர்முகம்மது தக்கலையில் நெசவுத் தொழில் செய்து கொண்டே, பல்வேறு விதமான இலக்கிய செயற் பாட்டுக் குள்ளும் இறங்கினார். தென்காசியில் இருந்ததால், அவரிடம் சைவ சமய தாக்கம் இருந்தது. அவருடைய பாடல்கள் பலவற்றில் சைவ சமய கூறுகள் உள்ளன.

இவர் நிகழ்த்தியதாக சொல்லப் படும் பல்வேறு அற்புதங்கள் செவிவழி கதைகளாக இப்பகுதியில் வலம் வருகின்றன.

சித்தர்களின் தியான கலை, மூச்சுகலை போன்றவற்றை பயின்றார்.

தமிழ் சித்தர்களின் மூச்சுக் கலையை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு வித புலன் செயல்பாடுகள் இவரிடத்திலும் இருந்ததாகக் கருதப்படுகிறது.

அப்பா அவர்கள் நீண்ட காலம் தங்கியிருந்த கேரளத்தின் ஒரு இடத்திற்கு இன்னமும் பீர்மேடு (இடுக்கி மாவட்டம்) எனும் பெயர் நிலவுகிறது. இறுதி யில் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலைப் பகுதிக்கு வந்து சிலகாலம் இருந்து ஞானம் உபதேசித்தார்.

பின்னர் இறுதி நாளும் தக்கலையிலேயே நிறைவு பெற்றது. இவருடைய தர்கா, பீர் முகம்மது ஒலியுல்லா தர்கா என்று அழைக்கப்படுகின்றது.



மருந்தாகும் வெற்றிலை

வெள்ளிலை, மெல்லிலை, மெல்லடகு, நாகவல்லி, நாகினி, வேந்தன், தாம்பூல வல்லி, சப்த ஷீரா, புஜங்கலதா எனப் பல பெயர்களால் அழைக்கப்படும் தெய்வீக மூலிகை இது. 'Piper betle' என்ற தாவரவியல் பெயரைக் கொண்ட வெற்றிலையில் கம்மாறு வெற்றிலை, கற்பூர வெற்றிலை, சாதாரண வெற்றிலை என மூன்று வகைகள் உள்ளன.

வெற்றிலையைப் பற்றி 1,500 ஆண்டுகளுக்கு முன்பே கல்வெட்டுகளில் தகவல்கள் இடம்பெற்றுள்ளன. பண்டைக் காலத்துப் பெண்களின் அழகு சாதனப் பொருள்களில் வெற்றிலைக்கு முக்கிய இடம் உண்டு. வெற்றிலையின் மருத்துவ பலன்கள் குறித்து அறிந்து கொள்ளலாம்.

வெற்றிலையில் கால்சியம் மற்றும் இரும்புச்சத்து அதிகம் உள்ளது. நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் சவிக்கால் (Chavicol) என்ற பொருள் உள்ளது. வெற்றிலை, வெப்பத்தை உண்டாக்கும், உமிழ் நீரைப் பெருக்கும், வாய்நாற்றம் போக்கும், பசியை உண்டாக்கும், பால் சுரக்க வைக்கும், நாடி நரம்புகளை உரமாக்க உதவும், ஆண்மைக்குறைவை நீக்கும்.

வெற்றிலைச்சாறுடன் தேவையான அளவு தண்ணீர், பால் சேர்த்துக் குடித்து வந்தால் தங்கு தடையின்றிச் சிறுநீர் வெளியேறும்

கொழுந்து வெற்றிலை ஒன்றுடன் ஐந்து மிளகு சேர்த்துத் தினமும் காலை வெறும் வயிற்றில் தொடர்ந்து எட்டு வாரம் மென்று சாப்பிட்டு வந்தால் இரைப்பை – குடல் வலி, அசிடிட்டி, செரிமானக் கோளாறு, மலச்சிக்கல் போன்றவை குணமாகும். உடலில் தேங்கியிருக்கும் நச்சுகளை வெளியேற்றும். உடல் சுத்தமாகும்.

மஞ்சள் நிறத்தில் காணப்படும் பழுத்த மற்றும் அழுகிய வெற்றிலையைத் தவிர்க்க வேண்டும். வெற்றிலையைத் தீயில் வாட்டி அதனுடன் ஐந்து துளசி இலைகளை வைத்துக் கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து 10 மாதக் குழந்தைக்குக் காலை, மாலை 10 சொட்டுகள் வீதம் கொடுத்து வந்தால் சளி, இருமல் குணமாகும். இதேபோல், வெறும் வெற்றிலையைத் தீயில் வாட்டி மார்பில் ஒத்தடம்

கொடுத்தால் சளி குறையும்.

கடுகு எண்ணெயில் வெற்றிலையைப் போட்டுச் சூடுபடுத்தி மார்பில் கட்டி வந்தால் மூச்சுத்திணறல், இருமல் கட்டுப்படும். வெற்றிலைச்சாறுடன் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் கஸ்தூரி அல்லது கோரோசனை சேர்த்துத் தேன் கலந்து கொடுத்து வந்தால் குழந்தைகளுக்கு உண்டாகும் சளித்தொல்லை, இருமல், ஜலதோஷம் குணமாகும்.



விதைப்பையில் ஏற்படும் வலி, வீக்கம் மற்றும் கீல்வாதக் கோளாறுகளுக்கு இலையை அரைத்துக் கட்டிவந்தால் உடனடிப் பலன் கிடைக்கும். வெற்றிலையில் விளக்கெண்ணெய் தடவி, தீயில் வாட்டிக் கட்டிகளின் மீது வைத்துக்கட்டி வந்தால் அவை பழுத்து உடையும்.

குழந்தை பெற்ற பெண்களில் சிலருக்குத் தாய்ப்பால் குறைவாக இருக்கும். இதேபோல் சிலருக்கு மார்பில் பால் கட்டிக் கொண்டு வீக்கமாகி வலியெடுக்கும். அப்படிப்பட்ட சூழலில் வெறும் இலையைத் தணலில் வாட்டி அடுக்கடுக்காக வைத்துப் பொறுக்கும் சூட்டில் மார்பகத்தில் வைத்துக் கட்டிவந்தால் பலன் கிடைக்கும்.

தேள் கடிப்பதால் ஏற்படும் விஷத்தை முறிக்க இரண்டு வெற்றிலையுடன் ஒன்பது மிளகு சேர்த்து நன்றாக மென்று விழுங்க வேண்டும். அத்துடன் தேங்காய்த் துண்டுகள் சிலவற்றை மென்று சாப்பிட்டு வந்தால் கைமேல் பலன் கிடைக்கும்.

தேள் கடி என்றில்லை,எந்த விஷப்பூச்சிகள் கடித்தாலும் இதுபோல் சாப்பிட்டால் நோய் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளலாம்.

வெற்றிலை போடுவதை, 'தாம்பூலம் தரித்தல்' என்று சொல்வார்கள். காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு தாம்பூலம் தரிக்கும் போது பாக்கு அதிகம் சேர்க்க வேண்டும். மதிய உணவுக்குப் பிறகு வெற்றிலை போடும்போது சுண்ணாம்பு அதிகமும், இரவு உணவுக்குப் பிறகு தாம்பூலம் தரிக்கும்போது வெற்றிலை அதிகமும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மதியம் தாம்பூலம் தரிப்பதால் பித்தம் கூடாமல் பாதுகாப்பதுடன் உணவில் உள்ள வாயுவையும் கட்டுப்படுத்தும். இரவில் வெற்றிலை போடுவதால் நெஞ்சில் கபம் சேராமல் பார்த்துக் கொள்ளும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் வெற்றிலை ஒரு சர்வரோக நிவாரணி''. எனவே வெற்றிலையை அளவோடு பயன்படுத்தி வளமோடு வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகின்றோம். ●

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.02.26

எவ்வளவு அடக்கினாலும் அடங்க மறுக்கும் மனமே நாம் மாற்ற வேண்டிய முதல் கருவி.

02.02.26

தங்களது எண்ணங்கள் எவ்வளவு உயர்ந்ததாயினும் அடுத்தவரின் எண்ணங்களுக்கு மதிப்பளிப்பவரே தமது எண்ணங்களை மதிப்பவராவார்.

03.02.26

உன்னால் இயலாததை அடுத்தவர் செய்யும்போது அபிப்ராயம் கூறாமல் கடந்துபோவதுதான் மனிதனுக்கு அழகு.

04.02.26

உங்களையே நீங்கள் மாற்ற முடியாதவரை நீங்கள் மிகவும் ஆபத்தானவர். எனவே ஒருவரையும் மாற்ற முயற்சிக்காதீர்கள்.

05.02.26

எவன் ஒருவன் அடுத்தவரை மாற்ற விரும்புகினறானோ அவன், அவனுக்கு எதிரியாகிவிடுவான். எவன் ஒருவன் தன்னை மாற்ற விரும்புகின்றானோ அவனுக்கு அனைவரும் நண்பனாகின்றனர்.

06.02.26

மீண்டும் பிறக்காமல் இருக்க இறைவனைச் சரணடையுங்கள். இறைவனின் ஆணையைப் பின்பற்றுங்கள். செய்த தவறை மண்டும் செய்யாதீர்கள். இல்லை என்றால் மானிடப்பிறவி வீணாகிவிடும்.

07.02.26

நீங்கள் தலைகீழாக நின்றாலும் கடவுளை சந்திக்கப் போவதில்லை. கடவுள்தான் உங்களை சந்திப்பார். அதுவரை தியானம் செய்யுங்கள்.

08.02.26

உலக விவகாரங்களில் உழல்பவர்களின் நட்பால் உண்மையான சாதகனுக்கு எந்தவிமான லாபமும் இல்லை. உங்களுக்கு நல்லவர்களின் நட்பு கிடைக்கவில்லை என்றாலும் தனியாகவே இருங்கள். அதனால்

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

உங்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை.

09.02.26

ஆசைக்கு அடிமையானவர்கள் இந்த உலகத்தின் அடிமை. யாருக்கு ஆசை ஆடிமையாக இருக்கின்றதோ அவர்களுக்கு இந்த உலகமே அடிமை.

10.02.26

எதையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். புரிந்து கொள்ளுங்கள். ஏற்றுக்கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் மிகப்பெரிய இடைவெளி உள்ளது.

11.02.26

வாழ்க்கை இப்படித்தான் இருக்கவேண்டும் என்று திட்டமிடாதீர்கள் நீங்கள் தோற்று விடுவீர்கள் வாழ்க்கையோடு இணைந்து வாழுங்கள் வாழ்க்கை தோற்றுவிடும்.

12.02.26

"நான்" என்ற அகப்பற்றையும், "எனது" என்ற புறப்பற்றையும் எவன் முழுதாக நீக்குகின்றானோ அவனே "இறை"ப்பற்றை இறுக்கிப்பிடிப்பான்.

13.02.26

மனம் உலகை அறியும். தியானம் கடவுளை அறியும்.மனம் கலைந்துபோகும் மேகத்தைத் தேடும். தியானம் நிலையாய் இருக்கும் வானத்தைத் தேடும்.

14.02.26

எவன் ஒருவன் என்னடா வாழ்க்கை இது என்று எப்போது அலுத்துக் கொள்கின்றானோ, அப்போது தான் அவன் வாழ்க்கையை புரிந்து கொள்ள முயற்சிக்கின்றான் என்று அர்த்தம்.

15.02.26

உன்னை வெல்வேன் என்பது உணர்வின் செயல். என்னை வெல்வேன் என்பதே அறிவின் செயல். அறிவே தெய்வம்.

16.02.26

உங்களுக்கு வெளியே எந்த மாற்றங்களையும் செய்யாதீர். உங்களுக்குள்ளே எந்த மாற்றமும் நிகழாது. உங்களுக்குள்ளேயே மாற்றங்களைச் செய்யுங்கள். வெளியே தானாக மாற்றம் வரும்.

17.02.26

நீ யார் என்பதை உணர்ந்து கொள்ள முயற்சித்தால் இந்த உலகில் "நீயும் இருப்பாய்". நீ யார் என்பதை உலகிற்கு காட்ட விரும்பினால் "நீ மட்டும்தான் இருப்பாய்".

18.02.26

உங்களைச்சுற்றி இருப்பவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களோ, அப்படி முதலில் நீங்கள் மாறிக்கொள்வதே அறிவு எனப்படும்.

19.02.2

உங்களுக்குண்டான பொறுப்பை மற்றவர்களின் மீது போடாதீர்கள்! அதை நிறுத்துங்கள். அதுவே உங்களுக்கு முதல் விடுதலை.

20.02.26

புத்திசாலிகள் முன்னேற்றத்திற்கான புதிய வழிகளை உண்டுபண்ணிக் கொள்கின்றார்கள். முட்டாள்கள் பழைய வழிகளையே செப்பனிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

21.02.26

சிந்தனையும், செயலும் ஒன்றாக இல்லாவிட்டால் எப்பேர்பட்ட பிரார்த்தனையும் பலிக்காது.

22.02.26

சூழ்நிலைகளுக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்டது

தான் வெற்றி பெற்றவர்களின் வாழ்க்கை ரகசியம்.

23.02.26

இருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடையாமல் இல்லாததை எண்ணி ஏக்கம் கொள்பவனின் வாழ்க்கை இறுதிவரை துன்பமாகவே கழியும்.

24.02.26

நீங்கள் இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும் என்று விரும்பினால், இந்த பூமியில் நடக்கும் எல்லா காரணகாரியங்களும் உன்னால்தான் என்பதை நான் மறந்துவிடக்கூடாது என்று பிரார்த்தனை செய்வீராக!

25.02.26

ஏமாந்து போவதால் எதுவும் இழக்கப்படுவது இல்லை. ஏமாற்றினால் எல்லாவற்றையும் இழக்க நேரிடும்.

26.02.26

ஞானம் என்ற கோட்டையை அடைய பல வழிகள் இருந்தாலும், பக்தி வழிதான் பாதுகாப்பானது. இருப்பினும் வழியில் ஆபத்துக்கள் அதிகம். எனவே மௌனம் என்ற மாபெரும் ஆயுதம் அவசியம்.

27.02.26

குருவின் வழிகாட்டலில் குறுக்கு வழி ஏதுமில்லை. குறுக்கு வழி செல்பவனுக்கு குருவின் வழிகாட்டலால் ஏதும் பயனில்லை.

28.02.26

இந்த பூமி இறைவனை அடைய ஒரு பாலம் மட்டுமே! இதை உண்மை என்று நம்பி இங்கேயே தங்கலாம் என்று கனவு காண்பவன் முட்டாள்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

புனித யாத்திரை

ஆண்டவன் தன்னை பிரார்த்திக்க வேண்டும் என்று விரும்பினால், உங்களுக்கு ஏதாவதொரு துன்பத்தைக் கொடுப்பான். வழியில் உங்களது வாகனம் நின்றுவிடலாம். அல்லது அதைவிட மோசமான நிகழ்ச்சி ஏதாவது நடக்கலாம். அதனால்தான் துன்பங்கள் ஆண்டவனின் வரப்பிரசாதங்கள் என்று கூறுகின்றோம்.

நமக்கு சிக்கல் வரும்போதுமட்டுமே ஆண்டவனை இதயப்பூர்வமாக பிரார்த்திக்கின்றோம். மற்ற சமயங்களில் நாம் ஆண்டவனை மேம்போக்காக நினைக்கின்றோம். துன்பம் நேரும்போது மட்டுமே, என்னால் இனி இயலாது, சிக்கலை உன்னிடம் ஒப்படைக்கின்றேன். உன்னை நம்புகின்றேன். நீ தான் அதைத் தீர்க்க வேண்டும் என்று புலம்புகின்றோம்.

தேவைப்பட்டால் ஆண்டவனை வணங்குவதல்ல வாழ்க்கை. வாழ்க்கை என்பதே ஆண்டவனை வணங்குவதற்குத் தான். வாழ்க்கை என்பதே ஆண்டவனை நோக்கிச் செல்லும் புனித யாத்திரை. ஆண்டவனை மட்டுமே நம்பி வெறுங்கையுடன் செல்வதே உண்மையான புனித யாத்திரை. ●

ஸ்ரீ சங்கர் மகராஜ் சரித்திரம்



மருத்துவர் தானேஸ்வரின் கதை மூலம், குருவின் வருகைக்கு பிறகு எப்படி எல்லாம் ஒரு பக்தரின் வாழ்க்கை மாறும், தொடர்ந்து அந்த குருவின் வழிகாட்டுதல் பக்தரின் வாழ்க்கை பயணத்தில் எப்படி உயர்வை உண்டாக்கும் மற்றும் பூர்வஜென்ம தொடர்புகளினால் எப்படி நாம் குருவிடம் சென்றடைவோம் போன்ற விஷயங்களை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

அப்பா என்று அன்புடன் அழைக்கப்படும் Dr. நாகேஷ் தானேஸ்வர், ராமச்சந்திர தானேஸ்வரின் மகன் ஆவார். அப்பா 1899 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் தேதி பிறந்தார். அவருடைய தந்தை நீதிமன்றத்தில் குமாஸ்தாவாக இருந்தார். அவர் ஒரு ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மாற்றலாகியிருந்தார். அதனால் அவர் தன் குடும்பத்தினர் அனைவரையும் ஒரு மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு பிரயாணத்தை துவங்கினார். அதில் அவருடைய கைக்குழந்தையும் அடங்கும்.

அவர்கள் மதிய உணவிற் காக ஒரு மரத்தடியில் வண்டியை நிறுத்திவிட்டு, தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையை சற்று தள்ளி படுக்க வைத்தனர். அவர்கள் குழந்தையை ஒரு கூடையில் வைத்திருந்தனர். அப்போது பாம்பு ஒன்று வந்து, அந்த கூடையை சுற்றி வளைத்து கொண்டு, படம் எடுத்து கொண்டிருந்தது.

அது பார்ப்பதற்கு குழந்தைக்கு பாதுகாப்பாக நின்று கொண்டு வெயிலுக்கு குடை பிடித்திருப்பது போல இருந்தது. பின்னர் குழந்தைக்கு எந்தவிதமான துன்பமும் அளிக்காமல் சில நிமிடங்களுக்கு பிறகு சென்று விட்டது. இதை பார்த்த அனைவரும் சிவபெருமானின் அனுகிரகத்தினால்தான் இவ்வாறு நடைபெற்றது என்று எண்ணி, குழந்தைக்கு நாகேஷ் என்று பெயரிடலாம் என்று முடிவு செய்தனர். நாகேஷ் என்றால்

நாகர்களின் தலைவன் என்பது பொருள். இது சிவபெருமானின் நாமங்களில் ஒன்று.

Dr. தானேஸ்வர் அஹமதுநகரில் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்ததும், தினமும் மாலை நேரங்களில் அவரின் நண்பரான ரங்காரி என்கிறவருடன் சாவேடி சாலையில் உலாவிக் கொண்டிருப்பார். இருவரும் நதிக்கரைக்கு அருகில் இருக்கும் ஒரு அத்தி மரத்தினடியில் அமர்வது வழக்கம். அத்தி மரம் தத்தாத்ரேயருடன் சம்பந்தம் உடையது. அங்கு அமர்ந்து கொண்டு பொழுதை கழிக்க விஷ்ணு சஹஸ்ரநாமம் கூறிக்கொண்டிருந்த போது, வாட்ட சாட்டமான முஸ்லீம் பக்கிரி ஒருவர் ஒளிபொருந்திய தேகத்துடன் அத்தி மரத்திலிருந்து தோன்றினார். இக்காட்சியை கண்டவுடன் சிறுவர்கள் இருவரும் திகைப்படைந்தனர்.

அப்போது பக்கிரி அவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டே, "உங்களுக்கு மாருதியை பார்க்க வேண்டுமா?" என்று கேட்டார். அப்பா, அதாவது ஞி ஷீ. தானேஸ்வர் "ஆமாம்" என்று தலையை ஆட்டியவுடன், பக்கிரி மேலே இருக்கும் மரத்தைப் பார்த்து, "வாருங்கள் மகராஜ், வாருங்கள்" என்று உரத்த குரலில் கூறினார்.

அப்போது ஆச்சரியத்திற் கிணங்க ஒரு பெரிய மனிதக் குரங்கு மரத்திலிருந்து இறங்கியது.

திருமதி. மாதங்கி பாலாஜி



பக்கிரி சிறுவர்கள் இருவரையும் அனுமனை நமஸ்கரிக்கும் படி கூறினார். அவர்கள் நமஸ்கரித்த அந்த கணமே மாருதி மரத்தின் மேல் ஏறி மறைந்துவிட்டார். சிறுவர்கள் இருவரும் வீட்டுக்கு சென்றுவிட்டனர். ஆனால் அவர்களுக்கு மீண்டும் பக்கிரியை சந்திக்க வேண்டும் என்கிற ஆவல் மிகுதியாக இருந்தது.

அவர்கள் விரும்பியது போலவே ஒரு மாத காலம் தொடர்ந்து தினமும் மரத்தினடியில் அவர்களை பக்கிரி சந்தித்து அவர்களுக்கு அருகே அமர்ந்து கொண்டு பல விஷயங்களை பேசியும், பல தந்திரங்களை கற்றுக் கொடுத்தும், நட்புடன் பழகினார். ஒருநாள் அவர் அப்பாவுக்கு ஒரு சித்தியை அளித்தார். அந்த சித்தியில் அப்பா தேர்ச்சி பெற்றவுடன், பக்கிரி அப்பாவின் முதுகில் தட்டிக்கொடுத்துவிட்டு, அந்த சித்தியின் பெயர் ராம்கதி என்று கூறினார். ராம்கதி என்றால்

ராமரின் தடி என்று அர்த்தம். ராமரின் பெயரை கூறியவுடனேயே அவர்களுக்கு மாருதியின் நியாபகம் வந்தது. பக்கிரி அழைத்தவுடன், மாருதி அவர்கள் முன்னால் தோன்றினார்.

சில அமானுஷ்ய விஷயங்களை அச்சிறுவர்களுக்கு வெளிகாட்டிவிட்டு பக்கிரியும் சென்றுவிட்டார். அதற்குப்பின் அவர்கள் பக்கிரியை மீண்டும் சந்திக்கவேயில்லை. இதுதான் அப்பாவுக்கு நினைவு தெரிந்து ஏற்பட்ட முதல் ஆன்மீக அனுபவம்.


நாட்கள் சென்றன. அப்பாவும் தன் பள்ளிப்படிப்பை முடித்தார். பள்ளியில் படிக்கும்போதே அவருக்கு மருத்துவத்தில் ஆர்வம் அதிகமாக இருந்தது. அவர் வீட்டுக்கு அருகே இருந்த Dr. கடேகர் என்கிற மருத்துவரிடம் பள்ளியில் படிக்கும் போதே ஆயுர்வேதம் படித்தார். பள்ளிப் படிப்பை முடித்தபின் 1918 ஆம் ஆண்டு மும்பையில் உள்ள கிராண்ட் மெடிக்கல் கல்லூரியில் சேர்ந்து முறையாக மருத்துவப்படிப்பு பயின்றார்.

அப்பாவுக்கு ஆயுர்வேதத்திலும் ஆங்கில மருத்துவத்திலும் ஞானம் இருந்ததால், ஆங்கில முறைப்படி குணப்படுத்த முடியாத வியாதிகளை ஆயுர்வேத முறைகளைக் கொண்டு குணப்படுத்திவிடுவார். அதே கல்லூரியில் மேல்படிப்பு படிக்க இடம் கிடைத்தபோதிலும், அதை தவிர்த்துவிட்டு, தன் சொந்த ஊரான அகமதுநகருக்கு வந்து சேவை செய்யவே விரும்பினார்.

அகமதுநகருக்கு ரயில் மூலமாக செல்ல வேண்டுமென்றால் டாண்ட் என்னும் இடத்தில் இறங்கி வேறு ரயில் பிடித்து செல்ல வேண்டும். டாண்ட் ரயில் நிலையத்தில் பணி புரியும் ஸ்டேஷன் மாஸ்டருக்கும் அப்பாவுக்கும் நல்ல பழக்கம் இருந்தது. அவர் அப்பாவிடம், தன் வீட்டுக்கு யோகி ஒருவர் வர இருப்பதாகவும், அன்று ஒருநாள் மட்டும் தன் வீட்டில் தங்கிவிட்டு நாளை கிளம்பலாம் என்று கூறினார்.

அந்த யோகிதான் ஸ்ரீ சங்கர் மகராஜ். அப்பா அன்றுதான் ஸ்ரீ சங்கர் மகராஜ் பற்றி கேள்விப் படுகிறார். அவருக்கு அந்த யோகி உண்மையானவரா அல்லது போலியானவரா என்று சந்தேகம் உண்டானது. இருப்பினும் தன் நண்பருக்காக சம்மதித்தார். இந்த குழப்பமான மனநிலையுடன் அவர் ஸ்டேஷன் மாஸ்டரின் வீட்டுக்குள் நுழைந்தார்.

அங்கு சாதாரணமான தோற்றத்துடன் இருந்த மனிதர் ஒருவர் மெத்தையின் மேல் ஒரு தலையணையில் சாய்ந்து கொண்டு அமர்ந்து கொண்டிருந்தார். அவர் வேஷ்டி, முழுக்கை சட்டை, அதற்கு மேல் ஒரு கோட் அணிந்து கொண்டிருந்தார். அவருடைய கைகள் மிக நீண்டு முட்டி வரை இருந்தது. அவர் தாடியுடன், கலைந்த தலைமுடியுடன் காணப் பட்டார். அவருடைய கண்கள் பெரியதாக, போதையில் இருப்பவர்கள் போல இருந்தது. மொத்தத்தில் பார்ப்பதற்கு மனநலம் குன்றியவர் போல தெரிந்தார்.



முதல் தடவை பார்த்த போது அவருக்கு எந்த நல்ல அபிப்பிராயமும் மகராஜ் மீது உண்டாகவில்லை. ஆனால் அப்பாவுக்கு அவருடைய சிரிப்பு வசீகரமாக இருந்தது. அதுமட்டுமில்லாமல் அச்சிரிப்பு அவருக்கு பரிச்சியம் ஆக இருந்தது. எங்கே இந்த சிரிப்பொலியை கேட்டிருக்கிறோம்? என்று அவர் யோசித்துக் கொண்டிருக்கும் போதே, ஸ்டேஷன் மாஸ்டர் மகராஜிடம், "மகராஜ், இவர் Dr. தானேஸ்வர். இவர் தன் மருத்துவ படிப்பை முடித்துக்கொண்டு சொந்த ஊருக்கு திரும்பிக்கொண்டிருக்கிறார்" என்று அறிமுகம் செய்து வைத்தார்.

ஆனால் மகராஜோ, "எனக்கு இவரை பல காலங்களாகத் தெரியும்" என்று கூறி அப்பாவை ஆச்சிரியப்படுத்தினார். உடனே அப்பாவின் பக்கம் திரும்பி, "உனக்கு ராம்கதி மறந்துவிட்டதா?" என்று கேட்டார். அப்பாவுக்கு தன் பழைய நினைவுகள் அனைத்தும் நியாபகம் வந்தது. அந்த பக்கிரியும் அவர் காட்டிய மாருதியும் அவருக்கு நியாபகம் வந்தது. 'அந்த பக்கிரி தகதகக்கும் மேனியுடன் அல்லவா இருந்தார்? இவர் ஊனமுற்றவர் போலல்லவா இருக்கிறார்' என்று அப்பா எண்ணினார். அதுவும் பக்கிரியின் பெயர் சங்கர் என்று இருக்க முடியுமா? இந்த மாதிரியான குழப்பமான எண்ணங்கள் அவர் மனதில் தோன்றிய போதும், அவர் சங்கர் மகராஜை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.

மகராஜ் அவரை தன்னருகில் வாஞ்சையுடன் அமர்த்திக் கொண்டு, மருத்துவத்தைப் பற்றியும், யோகத்தைப் பற்றியும் சில கேள்விகள் கேட்டார். இந்த உரையாடல் நள்ளிரவு வரை தொடர்ந்தது. மகராஜ் அவருக்கு சில உபயோகமான அறிவுரைகளை வழங்கியதோடு மட்டுமல்லாமல், உடலின் உள்ளுறுப்புகளைப் பார்க்கும் சக்தியை அளித்தார். அந்த காலகட்டங்களில் X-Ray வசதிகள் இல்லாததால், இதுபோன்ற சித்திகள் தேவைப்பட்டன.

தொடர்ந்து அப்பாவின் திருமணம், அவருக்கு மகராஜ் அளித்த ஆன்மீக போன்ற சுவாரசியமான விஷயங்களை அடுத்த அத்தியாயத்தில் அறிந்து கொள்வோம்.

ஸ்ரீ சங்கர் மகராஜுக்கு ஜயம் உண்டாகட்டும்!!

தொடரும்

மௌனத்தின் மூலம் தவம்

இறைவன் படைப்பில் பேசும் திறன் கொண்ட உயிரினம் மனித இனம் மட்டுமே. நமது எண்ணங்களையும், சிந்தனைகளையும் செயல்களையும் முழுமை படுத்துவது நமது பேச்சு. நம் உணர்வுகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடு பேச்சு. இந்த பேச்சின் எதிர்பதம் என்னவெனில் மௌனமாக இருப்பது தானே? நமது ஆத்ம ஞான குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் இதை மொழி மௌனம் என்கிறார்.

மேலும் மௌனத்தை, வாய் மௌனம், மன மௌனம், உடல் மௌனம் என்று தனித் தனியாக பிரித்து மௌனம் கடைபிடிக்க வேண்டும் என்று "மௌனத்தின் மூலம் தவம்" மூலம் நமக்கு கற்பித்து வருகிறார்.

மௌனம் என்பது பேசாமல் இருப்பது மட்டும் அல்ல, மனத்திற்குள்ளாக நாம் பேசும் பேச்சை நிறுத்துவது மட்டும் அல்ல, உடல் மொழி என்று சொல்லக்கூடிய நமது உடல் அசைவுகளின் மூலமும் மௌனத்தை கடைபிடிக்க வலியுறுத்துகிறார் நமது ஆத்ம ஞான குரு.

இந்த மூன்று நிலைகளும் எண்ணம் (மனம்), சொல்(மொழி), செயலுடன்(உடல்) இரண்டற கலந்துள்ளது சிந்தித்தால் விளங்கும். இம்மூன்றையும் மௌனம் என்ற தவத்தின் மூலம் நெறிப்படுத்த முடியும் என்று ஆத்ம ஞானம் வேண்டி நிற்போருக்கு போதிக்கிறார் நம் குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள்.

மன அமைதியை கடைபிடிப்பது ஞானம் மற்றும் ஆன்மீக வளர்ச்சியின் உச்சநிலை. இது நம் மேலான ஆற்றலைச் சேமிக்கவும், ஆழமான சிந்தனைக்கும், தேவையற்ற பிணக்குகளை தவிர்க்கவும், இறைவனோடு ஒன்றி இறைத் தன்மையை தன்னுள் உணரவும் உதவும் ஒரு சக்திவாய்ந்த யோகக் கலை மற்றும் தத்துவம். அதுவே நம் குருவின் "மௌனத்தின் மூலம் தவம்".

சித்தர்களும், ஞானிகளும், யோகிகளும் கற்றுணர்ந்து, கடைபிடித்து, போதித்த இந்த யோகக் கலை இன்று நமக்கு எந்த முயற்சியும் இன்றி மிக இலகுவாக கிடைக்கின்றது நமது ஞான குருவின் மூலம்.

ஆதலால் தானோ என்னவோ நாம் கருத்தில் கொள்ள தயங்குகிறோம். "கடை விரித்தேன் கொள்வாரில்லை" என வள்ளலாரும், என்னிடம் ஞானம் கேட்டு வருவோர் பாத்திரத்தை திருப்பி பிடித்து வருகிறார் என நம் சத்குரு

திருமதி. சாந்தி வெங்கடாச்சலம்



சாய்பாபாவும் கூறியவற்றையே நமது ஆத்ம ஞான குருவும் கூறுகிறார். சிந்திப்போம்.

மௌனத்தின் மூலம் நாம் மேற்கொள்ளும் தவத்தின் பலன்களாக நம் யோக குரு நமக்கு கூறும் அறிவுரைகள் :

* மௌனமாக இருந்தால் பல காரியங்கள் நமக்கு அனுகூலமாக முடியும்..
* மௌனம் நமது மன அழுத்தத்தைக் குறைத்து, மன ஆற்றலை (Focus) அதிகரிக்கிறது.
* மனம் அமைதி அடைகிறது.
* மௌனம் என்பது இறைவன் மொழி, இறை மூலங்கள் அனைத்தும் மௌனத்தின் மூலமாகவே நமக்கு ஞானத்தை உபதேசிக்கின்றனர்.
* அகத்தாய்வு செய்து, நம்மை நாமே ஆழமாகப் புரிந்து கொள்ளவும், வாழ்க்கை நடைமுறையில் ஏற்படும் பலதரப்பட்ட உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும் மௌனம் நமக்கு உதவுகிறது.
* பேசாமல் இருத்தல் கலகம், சண்டை, வீண் விவாதங்கள் மற்றும் மனக் கசப்புகளைத் தவிர்க்கிறது.
* உடலின் நோய்களை கட்டுக்குள் வைத்துக்கொள்ள முடிகிறது.
* சொல்லால் விளக்க முடியாத சத்தியத்தை, மௌனம் உணர்த்துவதால் அதுவே ஞானத்தின் வெளிப்பாடு என அறியலாம்.
* அமைதியாக இருப்பவர்கள் அதிக சக்தி வாய்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள், இதுவே வெற்றிக்கு வழி.
* மௌனம் ஆழ்ந்த அன்பை உணர்த்தும். அன்பை வெளிப் படுத்தும். நம்மை நாமே அன்பு செய்ய வழிவகுக்கும்.
* மௌனத்தில் மனம் தெளிவு பெற்று, புதிய சிந்தனைகள், படைப்பாற்றல் மற்றும் பக்குவம் உருவாகி அதன் மூலம் ஞானம் பெறலாம்.

"மௌனத்தின் மூலம் தவம்" மூலம் நம்மை மிக சிறந்த ஆத்ம ஞானிகளாய் வளர்க்க துணை புரியும் குரு வாழ்க! என்றும் குருவே துணை.

ஓம் சாய்ராம். ●

சிறந்த பிச்சை!

பிச்சை! என்ற சொல் அவசொல் ஆகிவிட்ட இக்காலத்தில், இவ்வார்த்தையின் உன்னதத்தையும், மகிமையையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். "ஏதுமற்றவன் யாதுமானவன்" என்கிற பிரபஞ்ச தத்துவமான சிவ பெருமானுக்கு பிட்சாடனர் என்ற பெயருண்டு. ஒவ்வொரு பிறப்பின் மூலமும் நீங்கள் உங்கள் தவறுகளைத் திருத்திக் கொண்டு, தியானம் செய்து, புண்ணியம் சேர்த்து, மீண்டும் பிறவி எடுக்காமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பை பிரபஞ்சம் நல்குகிறதே அதுவே பிச்சை தான்.



உடலோ தாய் தந்தை இட்ட பிச்சை, உயிரோ கடவுள் இட்ட பிச்சை, ஆனால் நீயோ நான் பிச்சையிட்டேன் என்கின்றாய்.

"பாத்திரம் அறிந்து பிச்சை போடு!" "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு!" என்ற பழமொழிகளுக்குள் வாழ்ந்து கொண்டு நாம் எண்ணவோ கொடுப்பதற்காகவே பிறவி எடுத்ததைப் போன்ற ஆணவத்தோடு வாழ்கின்றோம். உண்மையில் இந்த பூமியில் வாழும் அனைவருமே பிச்சைக்காரர்களாய்தான் வாழ்கின்றோம்.

இன்று உங்களிடம் ஒருவர் பிச்சை கேட்பது போலவே, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும், நீங்களும் கடவுளிடம் பிச்சை கேட்டுக் கொண்டு தான் இருக்கிறீர்கள். அப்படி என்றால் நாம் எல்லாருமே ஒரு வகையில் பிச்சைக்காரர்கள் தான். கேட்கின்ற விதத்தில்தான் வித்தியாசம்.

ஒரு முறை புகைவண்டி யில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது நடுத்தர வயதை கடந்த ஒரு பெண், பிச்சை கேட்பதற்காக வண்டியில் ஏறினார். அடுத்த சில நிமிடங்கள் அங்கு நடந்த ஒரு நிகழ்வு எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது அந்த பெண் தான் தெரியாமல் வழி மாறி வந்து விட்டதாகவும், உதவுவதற்கு யாரும் இல்லை எனவும், தனக்கு பண உதவி கிடைத்தால் பத்திரமாக ஊருக்கு சென்று விட முடியும் என்றும் கூறினார்.

அவர் சொன்னது என்னவோ புதிய விஷயம் எதுவும் இல்லை. எல்லா பிச்சைக்காரர்களும் வழக்கமாக சொல்லும் ஒரு கதை தான்.அது

சிவராமன்



உண்மையா இல்லை பொய்யா என்றும் எனக்குத் தெரியாது.

ஆனால் அவர் பிச்சை கேட்ட விதம். வித்தியாசமாக இருந்தது. அவரை நான் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். இரண்டு நிமிடம் அவர் பேசிய விதத்தில், அங்கு இருந்த எல்லோருமே கையில் கிடைத்த பணத்தை எடுத்து அவரிடம் நீட்டினர்.

அப்போது அந்த கௌரவ பிச்சைக்காரியின் கைகளில் 500 ரூபாயாவது இருந்திருக்கும். அவர் சொன்னது பொய்யாக இருந் திருக்கலாம். பொய்யாக இருந் திருந்தால் அவர் ஒரு "ராஜதந்திர பிச்சைக்காரர்".

ஒருவேளை உண்மையாக இருந்திருந்தால் அவர் சேர்த்த பணம் சரிதான். ஒருவர் நம்மிடம் பிச்சை கேட்கும் போது ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். நாம் கொடுக்கும் இடத்தில் இருக்கின்றோம். அவர்கள் பெறும் இடத்தில் இருக்கின்றார்.

எனவே அவர்களை அடிமை களைப்போல் நடத்தாதீர். இந்த உலகத்தில் யாரும் யாருக்கும் அடிமை இல்லை.

நாம் எல்லோரும் கடவுளின் கட்டளையை நிறைவேற்றவே இங்கு வந்திருக்கிறோம். அதே போல், சிலர் பிச்சையிட்ட பின்னர், பிச்சை வாங்கியவர் அங்கிருந்து கடந்து செல்வதற்கு முன்னரே, அவர் காதில் விழுவது கூட தெரியாமல், அப்பணத்தை தவறாகத்தான் பயன்படுத்துவார்கள் என்று சத்தமாக கூறுவது உண்டு.

அது மிகவும் தவறு. பிச்சை போடுவதற்கு முன்னரே நாம் செய்வது சரியா தவறா என்று சிந்திக்க வேண்டும். நீங்கள் முடிவெடுத்த பின்னர் அதைப்பற்றி யோசிக்கக் கூடாது. நீங்கள் போடும் பிச்சை சரியான விதத்தில் சென்றடையட்டும் என்ற பிரார்த்தனை மட்டுமே உங்களிடம் இருக்க வேண்டும். முடிந்தவரை பணமாக கொடுக்காமல் அவர்களுக்கு என்ன தேவையோ அதை அறிந்து கொடுக்கலாம்.

இதெல்லாம் ஒரு விஷயமா என்று நீங்கள் யோசித்தால், ஆம் இது சிந்திக்க வேண்டிய, விவாதிக்கப்பட வேண்டிய விஷயம் தான். இந்த விஷயத்தின் வீரியத்தை புரிந்து கொண்டால்தான், இதன் உன்னதத்தையும், அவசியத்தையும் புரிந்து கொள்ள முடியும்.

வாழ்க்கையில் "பாபா" நமக்கு எல்லாவற்றையும் அருளியுள்ளார். இருந்தும் ஒவ்வொரு நொடியும் ஏதாவது ஒன்றை பிச்சை கேட்டுக்கொண்டே இருக்கின்றோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ●



வின்னி மா-வின் விருப்பம்

பாபாவின் பரம பக்தையான டாக்டர் வின்னி சிட்லூரி அவர்கள் பாபாவின் மகாபக்தர்களில் ஒருவரானவரும், சாய் சத்சரிதத்தின் ஆசிரியருமான கோவிந்த் ஆர்.தபோல்கருக்கு கீழ்கண்டவாறு அஞ்சலி செலுத்துகிறார். "உங்கள் அகங்காரத்தை உங்கள் குருவிடம் ஒப்படைத்து விடுங்கள். அவ்வாறு செய்யும் போது, நீங்கள் உங்கள் குருவுடன் ஒன்றி விடுவீர்கள்". இதுவே திரு. ஹேமத்பந்திடம் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய வாழ்க்கை பாடமாக இருக்க வேண்டும் என்று டாக்டர் வின்னி சிட்லூரி அவர்கள் கூறுகிறார்.

பாபா, கோவிந்த் ஆர். தபோல்கருக்கு "ஹேமத்பந்த்" என்று பெயரிட்டிருந்தார். தபோல்கர் ஒரு ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்ததையும், பாபாவின் அனுக்கிரகத்தால் பிற்பாடு அவருக்கு அரசாங்கத்தில் வேலை கிடைத்ததையும், பின்பு சாய் பாபாவைச் சந்திக்க ஷிர்டிக்கு வந்ததையும், அங்கு பாபா கோதுமை அரைக்கும் லீலையைக் கண்டதையும் பற்றி சிட்லூரி அவர்கள் பேசுகிறார்,

தான் கண்டவற்றையெல்லாம் பதிவு செய்ய தபோல்கர் பாபாவால் தூண்டப்பட்டார். அதை மனதில் இருத்தி, எதிர்காலத்தில் அவருடைய கடமையை நிலைநிறுத்தும் விதமாக பாபா அவருக்கு "ஹேமத்பந்த்" என்று பெயரிட்டார். இவ்வாறு, பாபாவின் ஆசீர்வாதத்துடனும், அனுமதியுடனும், பாபாவின் அனைத்து பக்தர்களாலும் பெரிதும் போற்றப்பட்டு வணங்கப்படும் "சாய் சத்சரிதம்" என்ற புனித நூலை அவர் எழுதத் தொடங்கினார்.

இப்பணி ஹேமத்பந்த் என்பவரை ஒரு மனிதராக எவ்வாறு மாற்றியது என்பதை டாக்டர் வின்னி சிட்லூரி தனது நூலில் வலியுறுத்துகிறார். மராத்தியில் கவிதை வடிவில் எழுதப்பட்ட ஹேமத்பந்த் அவர்களின் மூல சத்சரிதை பற்றியும், அதன்பிறகு மொழி பெயர்க்கப்பட்ட மற்றும் பதிப்பு செய்யப்பட்ட பதிப்புகள் பாபா உரைத்த வார்த்தைகளுக்கு எவ்வாறு நீதி செய்யத் தவறிவிட்டன என்பதைப் பற்றியும் வின்னி மா நமக்குப் பற்பல விவரங்களைத் தருகிறார்.

அவர் மேலும், "என்றாவது ஒருநாள், யாராவது பாபாவின் வார்த்தைகளை, அவர் பேசியதன் சாரத்தை வெளிக் கொண்டு வருவார்கள் என்று டாக்டர் வின்னி சிட்லூரி பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தார்".

திருமதி. **சாந்தி வெங்கடாச்சலம்**

ஆம்! அந்த நம்பிக்கை வீண் போகவில்லை!! கடந்த நூறாண்டு காலமாக எத்தனையோ கற்றறிந் தோர், அறிஞர்கள், பண்டிதர்கள் எனப் பலர் சாய் சத்சரிதத்திற்கு விளக்கவுரை எழுதியிருந்தாலும் நமது ஆத்ம ஞான குருவும், மௌனோபதேசினியும், குண்டலினி யோகியுமான திரு. "யோகி ஸ்ரீராம் பாபா" அவர்கள் "சாய் மகாராஜ் குருவைத்தேடி" ஆன்மிக மாத இதழில் எழுதி வரும் "சாய் சரிதை"யிலும்,

ஒவ்வொரு ஞாயிறு அன்றும் நேரடியாக சாய் அன்பர்களுக்கு கூறி வரும் சாய் சத்சரித விளக்க உரையும், டாக்டர் வின்னி சிட்லூரி அவர்கள் கொண்ட "என்றாவது ஒருநாள், யாராவது" என்ற நம்பிக்கைக்கு 108 ஆண்டுகள் கழித்து நமது "யோகி ஸ்ரீராம் பாபா" மூலம் ஆத்ம ஞான கருத்துக்கள் விதைக்கப்படுவது, நமக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் ஹேமாட் பந்த் அவர்களால் எழுதப் பட்ட பாபாவின் கருத்துக்களில் உள்ளடங்கிய "ஆத்ம ஞான" த்தை வெளிப்படும் என்பது சத்தியம்.


உள்ளதை உள்ளபடி விளக்கினால் இங்கு கிடைப்பதும் கிடைக்காமல் போகும் என்பதை நன்கறிந்தும் தனது சற்குரு சாய்நாதரால் உணர்த்தப்பட்ட ஆத்மஞானத்தை எவ்வளவு சிரமம் ஏற்பட்டாலும், எவ்வளவு பகை வந்து சேர்ந்தாலும், கொள்வார் எவர் வரினும், உண்மைக் கருத்தை ஒளிக்காமல் அள்ளி அள்ளிக் கொடுப்பேன் என்ற உறுதியுடன் ஆத்மஞானம் போதிக்கும் யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் தோளோடு தோள் நிற்ப்போம் என்று உறுதி ஏற்போம்.

வாழ்க நமது குருவின் பணி, வளர்க அவரது புகழ் எட்டுத்திக்கும்.

குரு வாழ்க. குருவே துணை.

ஓம் சாய்ராம். ●

உள்ளது நாற்பது



ஒருமுறை நாராயண ஐயர் தனிமையில் தன்னுடைய ஆற்றாமையை பகவானிடம் கூறினார்.'பகவானே! எனக்கு வேதாந்தம் பிடிபடலே. கிருஹஸ்தனா யிருக்கறதனாலே என்னாலே உபாசனையும் பண்ண முடியலே. எனக்கு உங்களைத் தவிர வேற கதியில்லை. என்னை எப்படியாவது கரையேத்தி எனக்கு உண்மைக்கு வழிகாட்டுங்கோ. நான் உண்மையை ஒத்துக்கறேன். நீங்க சொல்ற நான் யார் என்ற "ஆத்ம விசாரம்" என்னாலே பண்ண முடியலே. என்னைக் கைவிட்டுடாதீங்கோ பகவானே!' என்று உள்ளம் நொந்து அழுதார்.

ஸ்ரீ இரமண பகவானிடம் கருணை ததும்பியது."ஓய்! உமக்கு 'உள்ளது நாற்பது' பாடமா தெரியுமா? "தெரிய லேன்னாலும் பரவாயில்லே. ஒவ்வொரு பாடலா ஒவ்வொரு வரியா பாடம் பண்ணும்.

அதைத் தினம் பாராயணம் பண்ணும்.


"காலத்துலே, வார்த்தை மறைஞ்சு உள்ளது ஒளிரும். பாம்பு சட்டைய உரிச்சிக்கொண்டு வர்ற மாதிரி ஞானம் வெளிப்படும். "இதை மட்டும் செய்யும்,அது போதும்" என்றார் பகவான்.

வாசகர் குரல்...

தேனினும் இனிய மொழி...

இம்மாத அமுத மொழி தேனினும் இனிய மொழியாய் இனித்தது. புண்பட்டிருந்த என் மனதை மயிலிறகாய் வருடிக் கொடுத்தது. சற்குரு சாயிநாத் மகராஜுக்கு ஜே! வாழ்க! வளர்க உங்கள் பணி! நன்றி!

– கே. ரமேஷ்சாய்,
திருவள்ளூர்.



அமுத மொழி, ஸ்ரீராம் பாபாவின் இனிய மொழிகள் அனைத்தும் அருமை. அகஸ்டின் அவர்கள் எழுதிய சூட்சுமவாதி கட்டுரை இம்மாதிரியான சித்தர் வகையறாகள் இன்றும் வாழ்கின்றார்களா என்ற வியப்பை ஏற்படுத்தியது.

– திரு. மதியழகன், குடவாசல்.

இம்மாத இதழில் சத்சித் ஆனந்தம் கட்டுரை நன்றாக இருந்தது. பாதாம் பிசினின் நன்மைகளை தெரிந்து கொண்டு பயன்படுத்தத் தொடங்கி விட்டேன். அகஸ்டின் அவர்கள் எழுதியதைப்போன்று குரு அவர்களின் சுட்சுமமான தீட்சையைப் பெற்று மிகப்பெரிய பலனை அனுபவித்துள்ளேன். மாதங்கி பாலாஜியின் தனிமைப் பயணம் போலவே நானும் குரு ஸ்ரீராம் பாபாவின் ஆசியைப் பெற்று தனிமை பயணத்தின் நிம்மதியை உணர்ந்து வருகின்றேன்.

– திருமதி. இந்துமதி,
அயனாவரம்.

வணக்கம் குருவே இம்மாத புத்தகத்தின் அட்டைப்படத்தில் இடம் பெற்றிருந்த பாபாவின் கண்களை பார்த்துக்கொண்டே இருந்தேன். சாய் சரிதம் மற்றும் சத்சித் ஆனந்தன் படிக்கும் பொழுது ஆனந்தமாக இருந்தது. திரு. சுந்தர் சாய்ராம் அவர்களின் இலங்கை பயணம் மற்றும் இலங்கை தமிழர்களின் குருவின் மீது உள்ள அன்பையும் படிக்கும் பொழுது ஆனந்தமாக இருந்தது குருவே சரணம்.

– திருமதி.தனம் அகஸ்டின். குன்றத்தூர்.

இம்மாத திருவருள் தேடியில், எங்களது பால்யகால அன்பு நண்பரும், குருஜியுமான யோகி. ஸ்ரீராம் பாபாவைப்பற்றிய எழுதிய திரு. சுந்தர்சாய் அவர்களுக்கு எங்களது மகிழ்வான வணக்கம். குருஜி யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் புகழ் மேன்மேலும் உயர பகவான் சாயிநாதரை பிரார்த்திக்கின்றோம்.

– அன்புநண்பர்கள் மற்றும்
சிஷ்யகோடிகள், கும்பகோணம்.

திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் எழுதிய தனிமைப் பயணம் கட்டுரை மிக அற்புதம். இதுபோன்று நானும் தனியாக பயணப்படலாம் என்று பலகாலம் யோசித்ததுண்டு. ஆனால் எனக்கு தைரியம் வந்ததில்லை. இப்போது எனக்கு வயது ஐம்பது. இப்போது இக்கட்டுரையை படித்ததும் எனக்கும் தைரியம் வந்துவிட்டது. நானும் தனிமைப் பயணம் மேற்கொண்டு கட்டுரை எழுதலாம் என்றிருக்கின்றேன். குருவருள் கிட்ட பிரார்த்திக்கின்றேன்.

– திருமதி. கமலா, திருத்தணி.

தபோவனம் ஞானானந்தகிரி சுவாமிகள், சாய் சரிதம், சங்கர் மகராஜ், மெய்ஞானம் கட்டுரைகள் மிகவும் அற்புதம். புத்தகம் சிறிதாயினும் கருத்துக்கள் ஏராளம். பயனுள்ள தகவல்கள். நல்ல பணி. தொடரட்டும் உங்களது சாயி சேவை.

– திரு. நாராயணசுவாமி, நங்கநல்லூர்.

சீரடி பயணம், ஸ்ரீ லஷ்மி ஹயக்கிரீவர் ஹோமம் புகைப் படங்கள் வண்ணத்தில் மிக அருமையாக வந்திருக்கின்றது. நாங்களும் கலந்து கொண்டதைப் போன்று இருந்தது. நன்றி அய்யா! விளம்பரங்களைக் குறைத்து இதைப்போன்று செய்திகளை அதிகப்படுத்தியதற்கு மிக்க நன்றி.

– திருமதி. உமாசங்கரி, பொள்ளாச்சி.

குருவின் பாதம் சரணம். இம்மாதம் திரு. நாராயணன் அவர்கள் எழுதிய வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம் தொடரின் மூலம் நம்பிக்கை என்ற வார்த்தை வாழ்க்கையில் எத்தனை தடைகளையும் உடைத்து நம்மை மேன்மையுற செய்யும் என உணர்ந்தேன். மகான்களை பற்றி அவ்வளவாக படித்ததில்லை, உங்கள் புத்தகத்தின் மூலம் அவர்களை பற்றியும் அவர்களின் வாழ்க்கை முறை பற்றியும் தெரிய வருவதோடு நாம் இங்கு வந்து என்ன தெரிந்துகொண்டோம் என்பதோடு வாழும் நாட்களை நேர்மையோடும், ஞானத்தோடு பயணிக்க வைக்கிறது.

குரு வாழ்க! குருவே துணை!

– திருமதி. சுகுணா ராஜசேகர்.
குரோம்பேட்டை.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி

இணையத்தில் படிக்க...

www.saidhyanalaya.org

சாய் தியானா

வாட்ஸ் அப் நம்பர்

99418 16692

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால்
காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: **9941816692**

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. ஷ்யாம் ராதாமணி குடும்பத்தார். வேளச்சேரி.ரூ.3500.

திரு. விஜயகுமார் குடும்பத்தார், ஆழ்வார்பேட்டை. ரூ.3000.

திரு.R.முனுசாமி- பச்சையம்மாள் குடும்பத்தார். ஆழ்வார்திருநகர். ரூ.3000.

திரு. பாலகிருஷ்ணன்.அண்ணாநகர். ரூ.3000.

திருமதி. ஹேமாவதி நமசிவாயம், சாலிகிராமம்.ரூ.2000.

திரு. கௌரிசங்கர், வேளச்சேரி. ரூ.1111.

திரு. ராஜகோபால் குடும்பத்தார். பெங்களூர். ரூ.1100.

திருமதி.அர்ச்சனா சாய், OMR. ரூ.1008

திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திரு. மோகன் அயனாவரம். ரூ.1000.

திருமதி. உமா மகேஸ்வரி, ஜோதிடர், அயனாவரம். ரூ.1000.
திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.
திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.
திருமதி. ஜெயசூர்யா, பெங்களூர். ரூ.1000.
திருமதி.சுகன்யா துரைராஜ், சென்னை. ரூ.500.
திருமதி.சுகன்யா மகேஷ்பிரபு, பெருங்குடி. ரூ.500.
திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.
திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.
திரு. உதி. மூர்த்தி, பெரம்பூர். ரூ.500.
திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திரு. சாய் ஜெயசந்திரன். தாம்பரம். ரூ.500.
திருமதி.பி. மகாலட்சுமி, மதுரை. ரூ.500.
திரு. கார்த்திக் லோகேஸ்வரி, வாடிப்பட்டி. ரூ.500.
திரு.துளசிராம் சாண்முகப் பிரியா.மதுரை ரூ.500
திரு.பாண்டி பானுமதி. மதுரை. ரூ.500
திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK. ரூ.500.
திருமதி. நித்யா ராஜேந்திரன், சென்னை. ரூ.500.
திரு. கிருஷ்ணமூர்த்தி, கோவை.ரூ.400.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. திலகம் கனி, கதிர். ரூ.400.
திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.202.
திரு. லோகித் சரண், கோவை. ரூ.201
திருமதி. பிரியா, அயனாவரம். ரூ.200.
திருமதி. அனிதா, பொள்ளாச்சி, ரூ.200.
திருமதி. ரமணி ராமலிங்கம்,அயனாவரம். ரூ.200.
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர்.ரூ.200.
திருமதி. பிரியாசுரேஷ், வேளச்சேரி.ரூ.200.
திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.200
திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திரு. லோகித் சரண், கோவை. ரூ.101.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு. செல்வவிநாயகம், மணலி. ரூ.100.
திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி மூ–1

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** - **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** - **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** - **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** - **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்

99418 16692, 88258 31068

'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை - 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM

INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai

AC.No: 6219480677

IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவித தமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068